
பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா }





| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1-12 |
| வெளிநாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

[வாரப்பதிப்பு]

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

| | |
|---|---|
| வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. | 8. |
| கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. | 2. |

☞ தனி விகிதமும் உண்டு.

மாலை 3 | ஈரோடு, பிரபவ ஹு புரட்டாசி ௴ 16௳ (2—10—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 23.



## மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, தாதுஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம் முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த ருசிகர சித்தரசாயனம். விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

## மகா ரசகெந்திமெழுகு.

தீராத வெண்குஷ்டம், கருங்குஷ்டம், திமிர் குஷ்டம், மேகம், ரணம், சூலை முதலிய கொடிய ரோகங்களை 1 மண்டலத்தில் பறக்கடிக்கிறது. 1 மண்டலமருந்து விலை ரூ. 4 வி. பி. வேறு கேட்லாக் இனும்.

## சூதகரோக நிவாரணி.

பெண்களுக்குள்ள சூதகக்கட்டி, சூதகச்சிக்கல் வயிற்று வலி, சதை வளர்ச்சி முதலியவற்றைத் தீர்க்கும் அமிர்த சஞ்சீவி. கேட்லாக் இனும் விலை ரூ. 2. வி. பி. வேறு.

ஆனந்த நிலையம், திருச்சங்கோடு.

இனும்! இனும்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனும்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனாஇனுமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும் தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

பற்று விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா மோட்டார் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், மைலாப்பூர்-மதருஸ்.

13-ம் வருடம் பிறந்து விட்டது. 13-ம் வருடம் பிறந்து விட்டது

## ‘ஆனந்த போதினி’.


ஓர் உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.
48-பக்கங்களில் உயர்ந்த வியாசங்களுடன் வெளிவருவது.
தமிழ் நாட்டில் உள்ள மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது.
13-வருடங்களாக நடைபெற்றுவருவது

20,000 சந்தாதாரர்களையுடையது. எல்லோரும் படிக்கத்தக்கது

இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 1—0—0
பினங்கு, சிங்கப்பூர், செட்டால் முதலிய வெளி நாடுகளுக்கு
வருட சந்தா ரூபாய் 1—4—0 மாதிரிக் காப்பி இனும்.

விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதாரஸ்

## Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போடோ பிடிக்கலாம். போடோவின் அளவு $3\frac{1}{2}$" x $2\frac{1}{2}$" ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி.
பிரும்ம சமாஜம், ஜி. டி. மதாரஸ்

## ஓமலூர் செட்டியார் செகண்டரி ஸ்கூல் பிராமண உபாத்தியாயரின் கொடுமை.

வேலாசாமி செட்டியார்செகண்டரி ஸ்கூலுக்கு ஹெட்மாஸ்டாராக எஸ். அனந்தநாராயண ஐயர் பி. ஏ. எல்.டி. திருச்சியிலிருந்து வந்தார். வந்து சேர்ந்ததும் தன் சுயரூபத்தைக் காட்ட ஆரம்பித்து விட்டார். உபாத்திமைச் சங்க எலக்ஷன் ஆரம்பித்தார். தலைவர் பதவியும், காரியதரிசி, கஜான்சிமுதலிய ஸ்தானங்களை யெல்லாம் பிராமணர்களுக்கே கொடுத்தார். பிராமணரல்லாத உபாத்தியாயர்கள் பல விதமாய்க் கேட்டுக்கொண்டும்பிரயோஜனப்படாமற் போய் விட்டது. பின்பு பிராமணரல்லாத உபாத்தியாயர்கள் மேல்கோட்டஞ் செலுத்தினர். பாடங் கொடுப்பதிலும், பிராமண உபாத்தியாயர்களுக்கும், பிராமணரல்லாத உபாத்தியாயர்களுக்கும் வித்தியாசங்களைப் பாராட்டினர். எப்பொழுது பார்த்தாலும் ஜாதிப்புகைச்சல் அதிகரித்துக் கொண்டே வந்தன.

இன்னும், பிள்ளைகளைச் சேர்ப்பதிலும் துவேஷ புத்தி அதிகரித்துக் கொண்டே வந்தது. பள்ளிக்கூடத்திலேயே சேர்ப்பதற்கு சட்டபடியும், நியாயப்படியும் தகுதியற்ற பிராமணப் பையன்களை கட்டாயப்படுத்தி சேர்த்தி வந்தார். பிராமணரல்லாத பிள்ளைகள் எல்லா விதத்திலும் முற்பட்டிருந்தும் அவர்களை நிராகரித்து வந்தார். இது விஷயமாய் பெற்றோர்களும், உபாத்தியாயர்களும், கமிட்டியார்களுங் கூட சிபார்சு செய்தும் அலட்சியம் செய்து விட்டார்.

பிராமணரல்லாதவர்களால் நடத்தப்படும் "தமிழ் நாடு" "குடி அரசு" "திராவிடன்" "ஜஸ்டிஸ்" முதலிய பத்திரிகைகளை வரவழைக்கக்கூடாதென்று தடை செய்து நிறுத்தி விட்டார்.

இத்துடன் நின்று விட்டாரா! அதுவுமில்லை. பின்பு கமிட்டியார் மேல்பாணந்தொடுத்தார். ஒரு வருட வாய்தாவின் மேல் சம் சம்பளம் பேசி ஒப்பந்தத்தின் மேல் வந்தவர் வந்து இரண்டு மாதமாவதற்கு முன்னமே தமக்கு அதிகச் சம்பளம் வேண்டுமென்றும 4, 5 வருட ஒப்பந்தம் கொடுக்க வேண்டுமென்றும், கொடுக்கா விட்டால் வேறு ஸ்கூலுக்குப் போவதாகவும் நோட்டீஸ் அனுப்பினர். ஸ்கூலுக்கு பலவித இடுக்கண்கள் விளைவித்து வந்தார். இவைகளை யெல்லாம் கமிட்டியார்கள் ஆர தீர யோசனை செய்து பார்த்து ஐயரின் இஷ்டப்படியே ஊருக்குப் போக உத்தரவு கொடுத்து விட்டார்கள் அவருக்குப் பதிலாகதிருவாளர் ஏ எம். ஆப்ரகாம் பி. ஏ. எல். டி. அவர்களை ஹெட்மாஸ்டராக நேமகம் செய்யப்பட்டிருக்கிறது. இதனைக் கண்டு பிராமணர்கள் மனவேதனை கொண்டிருக்கிறார்கள் பிராமணரல்லாதார்களுடைய பணத்தைக்கொண்டு நடத்தி வரும் ஸ்கூலிலேயேஇவ்விதம் நடக்குமானால் பிராமண அதிகார ஆதிக்கத்தில் நடந்து வரும் ஸ்கூலில்பிராமணரல்லாத பிள்ளைகளின் கதி என்ன பரிதாப நிலையில் இருக்குமென்பதை வாசகர்களே யூகித்தறிந்து கொள்ள வேண்டும்.

தே, வெ. கதரி செட்டி

## புரோகிதர் படாடோபம்.

நாளது மாதம் 15 தேதி திருநெல்வேலி ஜில்லா வீரகேரளம் புதூருக்கடுத்த அதிசயபுரம் என்ற கிராமத்திலுள்ள ஆலயத்தில் சில கிறிஸ்தவர்களுக்கு விவாகச் சடங்கு நடைபெற்றது. அச்சடங்குகளை நிறைவேற்றுதற்கு அண்டையிலுள்ள ஸ்ரீமத் டி. ஜே. ஹாரீஸ் ஐயர் வந்திருந்தார். முற்பகல் பத்தரை மணிக்கு நால்வர் மாப்பிள்ளைகளும் அவ்வவர்களுக்கு நியமிக்கப் பெற்ற நால்வர் பெண் மக்களும் தந்தம் பந்துமித்ரர் சகிதம் ஆலயத்துட்புகுந்தனர்.

ஐயரும் பீடத்தருகே எழுந்தருளி இத்தம் பதிகள் நால்வர்க்கும் திவ்ய நிபந்தனைகளை எடுத்துரைப்பது சிரமம் என்றுணர்ந்தாற் போல் அவர் முகத்தில் விசனம் குடிகொண்டிருந்தது. தேவாராதனை தொடங்கு முன்னரே காணிக்கைகளைக் படைக்குமாறு கேட்டனர். பெண்களில் ஒருவர் கல்வி பயிலாதவர் என்ற காரணத்தால் அவர் தந்தையாரிடம் பாதிரியார் விசேஷித்த காணிக்கை ரூபாய் ஒன்று கேட்டனர். அதனால் சிறிது நேரம் வாக்கு வாதம் நிகழ்ந்தது பின்னர் பாதிரியார் தமது வித்தை பலிக்காதென்றுணர்ந்தவராய் ,ஆராதனை நடத்தத் தலைப்பட்டனர். இம்மென்னுமுன்னே ஏழு ஜெபமும் அம்மென்னு முன்னே ஆறு ஜெபமும் உச்சரித்து முடித்துத், திவ்விய நிபந்தனைகளை வாங்கத் தம்பதிகளிடம் வந்தணுகினர். மிகவும் பயபக்திக்குரிய அவைகளை வதுவார்கள் பாதிரியார் செவியிற்படும் படிக்கேயன்றி யாவர்க்கும் கேட்கும்படி உச்சரிப்பது எவ்விடத்திலும் வழக்கமில்லை. அதிலும் நாணம்மிக்க நமது இந்திய மாதர்கள் நாயகன் பெயரை ஓரோ விடங்களில் சொல்லவும் நேரிடும். மெதுவாக உச்சரிப்பது பாதிரியாருக்குப் பிடித்தமில்லை. சற்று எட்ட நின்று கொண்டு சத்தமிட்டு உச்சரிக்கும்படி ஒவ்வொரு வரையும் கட்டாயப்படுத்தினர் அவ்வண்ணம் செய்யாவிடல் தாம் விவாகத்தை நிறுத்தி விடுவதாகவும் பயமுறுத்தினர். கோபாவேசத்துடன் அதட்டிக கடுமொழி கூறினர் பாவம்! பேதைப்பெண்கள் என் செய்வர்! அப்புறம்பாதிரியார்எஞ்சிய ஜெபங்களையும் வாயுவேகம் மனோவேகமாய் உச்சரித்துக் கடனைக் கழித்தனர். பிரசங்கசந்தர்ப்பத்தில்பாதிரியார்படாடோபப் முன்னிலும் அதிகமாகவேயிருந்தது. அதன் பின் ஆசீர்வாதம் கூறுவது அதனிலும் பதின் மடங்கு வேகமாய் நடைபெற்றது. கணக்கற்ற வேலைகளை இழுத்து வைத்துக் கொண்டு கடனைக் கழிக்காமல் பாதிரிமார் தமது உத்தியோகப் பொறுப்பை இனிதுணர்ந்து மலர்ந்த முகத்துடனும் அமர்ந்த மொழியுடனும் தங்கள் கடமைகளைச்செய்ய முன் வருவார்களாக என்று ஆ. மதனபாண்டிய னடார் எழுதுகிறார்.

---

**தென்னாப்பிரிக்காவில் பார்ப்பனர் சமத்துவம் கேட்கிறார்கள்.**

**இந்தியாவில் பார்ப்பனர் தெரு வழி விடுவதில்லை.**

---





**பெட்ரோமாக்ஸ் லைட்.**

லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கேட்லாக் இனும்

**ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.**

முன் விலை ரூ 14. இப்போழுதரூ 7.

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும் 5 வருஷம் உத்திரவாதம். ரூ, ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE,

George Town, Madras.

---

## கணித சோதிடம்

பாகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும்,இன்னொன்று மிவகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,

முதலியார் பேட்டை, புதுச்சேரி.

---

## சரீர மர்ம சாஸ்திரம்.

(ஓர் மானிட மர்ம நூல்.)

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது ஸ்தானங்களின் அமைப்பும், சம்சார சுகம் குடும்ப ரஹசியம், மணவாழ்க்கை மர்மம், அடங்கியது. கல்யாணமானவருக்கும், கல்யாணமாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல்.




64 படங்களுடன் 200 பக்கங்கள் பெரிய புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1,

மாணிக்க விலாசம் பிரஸ்.

அருணாசல முதலி வீதி, மதராஸ்

# அவியல்.

## 12-ம் பாகம்

## விரையஸ்தானம்.

(கைவல்ய சாமியார் எழுதுவது.)

வசந்தன்:—சந்திரா! நீ ஆதி திராவிடர்களைப் பள்ளியில் சேர்த்துக்கொள்ளாததைப் பற்றியே பேசிக்கொண்டுவரும் இந்த சமயம் நான் குறுக்கிடுவதற்கு மன்னிக்கவேண்டும். உங்கள் 'குடியரசு' மகாத்மா அவர்கள் சொல்லும் வருணாஸ்ரம தர்மத்தையும் இந்துமதம் தொலையவேண்டுமென்பதையும் பற்றி எழுதிவருகிறது. இதையெல்லாம் படித்த என் மனம் கவலையடைகிறது. சமயம், குறிப்பிட முடியாதபடி மனிதனின் எண்ணம் இருளடையும் காலத்திற்கு முன்னே தோன்றி உலகமெல்லாம் இந்துமதத்தின் அருமையை ஒத்துக்கொள்ளுகையில் அதைத் தொலைக்கவேண்டுமென்று சொல்லலாமா? ராமாயணத்தைவிட விசேடமுடைய புராணமெது? ரிஷிகளுடையவும் ஆசாரிகளுடையவும் வார்த்தைகளைத் தள்ளிவிடாதீர்கள் என்று சொன்னால் தப்பென்ன? இந்திரியங்களின் எல்லையைக் கடந்து காரியசித்தி அடைந்தவர்களல்லவா ரிஷிகள்! இதையெல்லாம் "குடியரசு" குற்றம் சொல்லிக் கொண்டிருப்பது என்னைப்போல அநேகருக்கு வருத்தத்தை கொடுக்கக்கூடியதாயிருக்கிறது.

சந்திரன்:— வசந்தா! உங்கள் உள்ளத்தில் பதிந்து கிடக்கும் மூடபக்திக் கொள்கைகளை நினைத்துப்பார்க்க உங்களுக்கு அவகாசமிருந்தால் சமயத் துராபிமானமும் இழிந்த அற்பபுத்தியும் அகற்றி, ஒவ்வொருவருக்கும் தம்மிடத்துள்ள பொருளே சிறப்பானதாகுமென்னும் பிடிவாதக் குணத்தைப் பொதுப்படுத்திப் பார்க்கும் தன்மையால் விட்டுவிட்டு, வெள்ளிக்காசும் செல்வப்பேறுமே சிறந்த தெய்வமெனக் கும்பிட்டு மற்றவர் சொத்து எக்கேடு கெடினும் தம்சொத்தையே எவ்விதத்திலும் பாதுகாக்க வேண்டியது என்னும் சுபாவ குணங்களை தூர நீ நீக்கி, நீ கேட்ட சங்கைக்கு உத்தரங்கேள். கண்ணாடி மூடிக்குள்ளே தண்ணீர் விட்டு அதில் வளர்க்கப்பட்ட பொன்னிற மீன்கள் கண்ணாடியைத் தண்ணீரென நினைத்து அதில்வந்து மோதிக்கொள்ளுமாம்; பிறகு பெரிய தொட்டியில் கொண்டுபோட்டாலும் தண்ணீரைக் கண்ணாடியென்று நினைத்துப் பயந்து பழய படி மூடி எல்லைக்குள் சுற்றுமாம். அதுபோல எத்தனைதான் "குடியரசு" நியாயத்தை எடுத்து மெய்ப்பித்தாலும் கடவுள் தோஷமும் ஆசார தோஷமும் அபசார தோஷமும் எதற்கும் வந்துவிடும் என்கிற உபதேசமானது உங்கள் எலும்புக்குள் ஊறிக் கிடக்கிறது. நான் இப்பொழுது சொல்லிவருவது அவியல் 12-ம் பாகம். சோதிடத்தில் 12-ம் பாகம் விரையஸ்தானம். உச்சம் ஆட்சிபெற்ற எந்த ராஜகிரகமானாலும் அந்த ஸ்தானத்தில் அதன் பலனைக் கொடுக்காதென்பது சோதிட சாஸ்திரம். அதுபோல எந்த மகாத்மாவாயிருந்தாலும் தென்தேச பாப்பார ராசியிலிருந்தால் அவர்கள் பலன் பன்னிரண்டாம் ராசியின் பலனாகிவிடும். இது அநேகநாளாகச் சரித்திரப் பிரத்தியக்ஷ அனுபோகம். ஒரு தெய்வம் கொடுத்த வரத்தைக் கெடுக்கவோ, இன்னொரு தெய்வம் கொடுத்த வரத்தை மாற்றவோ, நீதிமுறை தவறி நடக்கவோ, மாற்றவோ வேண்டி வந்தால் அந்தத் தெய்வங்கள்கூடப் பார்ப்பன வேஷமெடுத்துவந்திருப்பதாகவே புராணங்கள் சொல்லுகின்றன. இரக்ஷண்ய சேனைக்கார வெள்ளைக்கார ஆணும் பெண்ணும் நம் தேசத்து வேஷ்டி புடவைகட்டி வேஷம் போட்டிருப்பதுபோல மகாத்மாவைச் சுற்றியிருக்கும் பார்ப்பனர்கள் தாங்கள் வருணாஸ்ரமிகளல்லவென்று வேஷம் போட்டுக்கொண்டிருப்பதும் பார்க்கிறோம். பார்ப்பானுடைய மந்திராலோசனையில் ஞாயம் ஆவன்காரியத்தைத்தான் நோக்குமென்பதை அனுபோகத்தில் தெரிந்த ஔவை, "நூலெனிலோ கோல்சாயும்" என்றார். —மகாத்மா காந்தி செய்யும் பிரசங்கங்களுக்குச் சரியான அர்த்தம் செய்யப்படுவதில்லை. எதற்கும் அர்த்தம் அவனவன் அவசரப்படி செய்து சமூகங்களை இந்துமத சாஸ்திரமென்னும் பெரும் பூதத்தால் பயமுறுத்தி; இந்தப்புறம் அந்தப்புறம் அசையாமல் இருக்கிக் கட்டிவைத்திருக்கும் புரோகிதப் பரம்பரை மகாத்மாவின் வார்த்தைகளுக்கு தங்கள் அதிகாரம் நிலைக்கத்தகுந்த அர்த்தம் செய்வதில் ஆச்சரியமில்லை. மகாத்மாவின் பிரசங்கத்திற்குச் சத்தியமூர்த்தியும் ராஜகோபாலாச்சாரியும் அர்த்தம் செய்வது இரண்டுவிதமாக விருந்தென்று "தமிழ்நாடு" பத்திரிகை சிலநாள் முன் காட்டிற்று. அவர் பிரசங்கம் "தமிழ்நாடு" பத்திரிகையில் ஒருமாதிரியும் "சுதேசமித்திர"னில் வேறுமாதிரியு மிருக்கிறது. தேவேந்திரப் பட்டத்திற்குப் போன நகுஷன் ஒரு பதம் தவறி சுரத்தை உபயோகப்படுத்தினதினால் மலைப்பாம்பானான் என்று புராணம் சொல்லுகிறது. இந்தப் புராணத்தை எங்களுக்குச் சொல்லுகிறார்களே ஒழிய மகாத்மாவிடமிருக்கும் பாப்பார்கள் மகத்தையே விழுங்குவதற்கும் மதம் பழைய மௌடீகத்திற்கே கொண்டுபோய் சேர்க்கும் வழியிலும் அர்த்தம் செய்வதில் பயப்படுவதில்லை. ஏனெனில் எல்லாப் பிராயச்சித்தங்களும் அவர்கட்குத் தெரியும். கடவுளின் அருளுக்கு மிட்டாய் என்று பேர்கொடுத்து அந்த அருள்மிட்டாயை உண்டால் பிறவித் துன்பமும் தீர்ந்துவிடுமென்று பக்தர்கள் பாடியிருக்கிறார்கள். அந்த மிட்டாய்ப் பாட்டை பக்திமான்கள் நிறைந்த கோவிலில் பாடினால் பக்திமான்களுக்கு அனுகூல மூண்டுபண்ணலாம். அந்த கூட்டத்தில் குழந்தைகளிருந்தால் அவைகளுக்கு மிட்டாய் மிட்டாய்தான் வேண்டும் அங்கிருக்கும் பக்தகோடிகளுடைய பக்தியைக் கெடுத்தும் விடும். பக்தகூட்டத்திலேயே அதி ஜாக்ரதை வேண்டியிருக்க, அந்த மிட்டாய்பாட்டை ஆஸ்பத்திரியில் வந்து பாடினால் வியாதிஸ்தன் கடையிலிருக்கிற மிட்டாய் என்றும் அதை தின்றால் எல்லா வியாதியும் போய்விடுமென்றுதானே நினைப்பான். தத்துவார்த்தத்திற்குரிய சாஸ்திரத்தையெல்லாம் ஆராச்சிபண்ண அவனுக்கும் சக்தியில்லை. ஆசை விடாது. அவனுக்கும் தெரியாது. பக்கத்திலிருக்கும் நர்ஸ் கொடுக்கிற ஆகாரத்தையும் விட்டுவிடுவான். வியாதிஸ்தர்கள் மிட்டாய் சாப்பிட்டால் எல்லா வியாதியும் போய்விடுமென்று பெரிய டாக்டர் சொல்லுகிறார் என்று சின்ன டாக்டர்களிடம் சொல்ல, அவர்கள் கேட்டு அந்த மிட்டாய் பக்தர்கள் சொன்னமிட்டாய் கடைமிட்டாய் அல்ல என்று சின்ன டாக்டர்கள் ஒவ்வொரு வியாதிஸ்தனிடமும் சொல்லவேண்டி யிருக்கிறது. சொல்லுவதும் சாத்தியமில்லை. சொன்னாலும் கேட்பவன் சொற்பம். மற்றவர்களெல்லாம் ஆசையாலோ பத்தியத் தாழ்வாலோ அவஸ்தைப்பட்டுச் சாவார்கள் என்கிற ஞாயப்பிரகாரம் வருணாஸ்ரம தத்துவங்கள் தெரிந்தவர்கட்கு மகாத்மா ஆதிதிராவிடப் பெண்ணை வளர்க்கும் வருணாஸ்ரம தர்மத்தின் அர்த்தம் தெரியும். மற்றவர்கட்கு மலையாளத்தில் தீண்டப்படாதவர்கள் கோவில் மதிலைத் தீண்டிவிட்டதால் புஷ்ப அபிஷேகமென்று 1008 பரை புஷ்பத்தில் அர்ச்சனைசெய்யும் வருணாஸ்ரமம்தான் தெரியும். (பட்டணம் பக்காப்படி மூன்றுகொண்டது ஒருபரை) மகாத்மா சொல்லும் வருணாஸ்ரமம் தெரிந்த பாப்பான்கூட தங்கள் ஜாதியின் மேன்மை போய்விடுமென்று நினைத்து சரியான அர்த்தம் சொல்லாமல் பிராமணன் சூத்திரன் என்னும் அர்த்தத்தில் சகலசமூகங்களையும் அடிமை நிலையில் வைக்கவே உயர்வு தாழ்வு என்னும் அர்த்தத்தையே மகாத்மாவின் பேரால் வழங்குவார்கள் என்பதைத் தெரிந்து "குடியரசு" கண்டிப்பதில் சத்தியமில்லையா? 'சமய அபிமானம் சந்நியாசியையும் விடாது' என்பதுபோல் அவருடைய சாந்தமான குணத்திற்குத் தகுந்தமாதிரி அவருடைய உபதேசமிருக்கட்டும். 'குடியரசு' சொல்லுவதற்கு மட்டும் பதில் சொல்லுகிறேன். உன் விவேகத்துடன் ஆராய்ந்து பார்.

இந்துவேதங்களில் சொல்லப்பட்ட விஷயங்கள் உண்மையென நிரூபிப்பதற்கு ரிஷிகளின் ப்ரத்யக்ஷ தத்துவமே சிறந்த சாக்ஷி என்பதும், அந்த ரிஷித்தன்மை காலத்தாலும், தேசத்தாலும், ஆண்பெண் என்கிற வேற்றுமையாலும், ஆரியர் அல்லாதார் என்கிற ஜனசமூக பேதத்தாலும் பாதிக்கப்படாமல் எல்லா ஜாதியாருக்கும் சமான பாத்தியமுள்ள பொதுச் சொத்தென்றும் சொல்லப்பட்டிருப்பது "குடியரசு"க்குத் தெரியும். அப்படியிருக்க அதை மறைத்தும் சித்திரபுத்திரன் கதை கருடபுராணம் முதற்கொண்டு மந்திரமென்றும் தந்திரமென்றும் புராணம்வரையிலுமெழுதி அதைப் படிக்கப்படாது, இதை தொடப்படாது, கேட்கப்படாது, வேதத்தைக் கேட்டால் பாவம், தொட்டால் நரகம் என்று அநேக கர்மங்களை ஏற்படுத்தி, எதற்கும் பிராயச்சித்தங்களை உண்டுபண்ணி, அதற்கு தானதருமம் வழங்க விதித்து, அத்தனையும் ஒரே ஜாதியைப் பொருத்தும் அவர்கட்கே எல்லாம் கொடுக்க வேண்டுமென்னும் அதற்குத் தக்கவாறு புஸ்தகங்களும் கற்பனை சுலோகங்களும் செய்து, அவைகளையே கடவுளால் கொடுத்த சாஸ்திர இந்துமதமென்று சொல்லி, ஜன சமூகங்களை அடிமையால் பாழ்பண்ணும் ஏற்பாடுகள் இந்துமதமாயிருந்தால் பொதுச்சொத்துடையவர்கட்கு அது அழியவேண்டியதில் ஆட்சேபனை என்னவென்றுதான் "குடியரசு" கேட்கிறது. இந்து மதத்தை தேவேந்திரனுக்கு வியாழபகவான் உபதேசிக்க அதைக்கேட்ட இந்திரன் காட்டுக்கு போய்விட்டான். இந்திரனில்லாது தேவலோகம் அழிந்துபோக மறுபடி தேவேந்திரனுக்கு வியாழபகவான் நிரீஸ்வர வாதத்தை உபதேசித்து தெய்வலோகத்தை சீர்திருத்தினார் என்கிற கதையும் அது முதற்கொண்டு புத்தருடைய பௌத்த மதமும், கிருஷ்ணனுடைய கீதையும், சங்கராச்சாரியார் இயற்றிய சாரீர பாஷ்யத்தின் உபோத்காதத்தின் விசாரணையும், குருநானக்கின் சீக்கியமதச் சேர்க்கையும், தயாநந்தசரஸ்வதி முதலியவர்களுடைய ஆரிய சமாஜம் பிரம்ம சமாஜத்தின் ஞானபாகங்களும், இந்துமத ஆபாசங்களை ஒழிக்கவந்தது போல் இப்பொழுது எங்கள் "குடியரசு" சொல்லுகிறது. சுவாமி விவேகானந்தரும் அமெரிக்காவில் இங்கிருக்கும் ஆபாச இந்துமதத்தைச் சொல்லவில்லை. ஆத்மஞான தத்துவங்களுக்கு ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் உள்ள சம்பந்த தத்துவங்களைச் சொன்னார். அதனால்தான் அங்குள்ள சிலர் இந்துமதத்தை விசேடமாகச் சொன்னார்கள். "தீண்டப் படாதவர் எங்கள் சுவாமி மதிலைத் தொட்டால் அர்ச்சனைக்கு 3024 படி புஷ்பமும் கும்பாபிஷேகத்திற்கு பத்தாயிரமும், வயிற்றில் ஒரு அடி கொழுப்பு நிறைந்து இறைப்பையும் குடலும் பெருத்து வளர்ப்புராளியும் தூற்றுதலுமே தொழிலாக உடைய பிராமணர்களுக்கு அன்னதானம் செய்ய பத்தாயிரமும் சதிர் சங்கீதபாட்டுக்கு பத்தாயிரமும் மடாதிபதிகள் உத்தியோகஸ்தர்கள் மற்றுமுள்ளவர்கட்கு வெகுமான உபசார ஆடம்பர கைநீட்டு கைகூலிக்கு முதலியவைகட்கு பத்தாயிரமும் இத்தனைபோட்டு கும்பாபிஷேகம் செய்துவைத்தால்தான் எங்கள் சாமியின் தீட்டு தீரும்.

(14-ம் பக்கம் தொடர்ச்சி பார்க்க)

## தலைவர் திருவாளர் தணிகாசலஞ் செட்டியாரவர்களுக்கு ஒரு பகிரங்கக்கடிதம்.

ஐயா,

இன்று நம் "திராவிட"னில் தங்கள் வீட்டில் நடந்த திருமணச் சடங்கிற்கு பிராமண புரோகிதம், சம்பாவனை சமயல் வேலை நடந்ததாக வாசிக்கத்திடுக்குற்றேன். நம் கட்சி கொள்கை என்ன என்பதை தாங்கள் தலைவராயிருந்தும் அறியாமை என்னே? தாங்கள் பிறர்க்கு பிரசங்கம் செய்வது என்ன? தாங்கள் நடவடிக்கையில் நடந்தினதுஎன்ன என்பதை நினைக்குங்கால் என்மனம் கொதிக்கிறது. ஒரு பிரசங்கி, அவர் பிரசங்கத்தில் உலகத்திலே சிறந்தவர் யார் என்று எந்த பாகத்தில் கேட்டாலும் சிறு பிள்ளை முதல் யாவரும் மகாத்மா காந்தியேயென்றார்களாம். ஏனென்று கேட்டதற்கு அவர் சொல்வதை நடத்திக் காண்பிப்பதனால் என்ற பதில் கிடைத்ததாம். அது சரியோ, தப்போ, மகாத்மாவின் நன்னடக்கைக்கும், அவருடைய சுயமரியாதையை பார்ப்பனர்களிடம் விற்றுவிட்டு சக்கஸ் ஆடுவதைப்பற்றியும் நமக்கு கவலையில்லை. ஆனால் தங்களின் பிரசங்கங்களை அநேகம் தடவை கேட்டதற்கு இது மாற்றமே. நம் கட்சிக்கு அதிகாரத்தை சென்ற வருஷம் நவம்பர் மாதம் கிட்டிய போது, நம் மாபெரும் தலைவர் வைக்கம் வீரர் பெருமான் அவர்கள் புத்துயிரளித்து ரட்சித்தார். அப்போது நடந்தமதுரை மகாநாடு எவ்வளவு சிறப்பாகவும், எவ்வளவு ஊக்கத்தோடும் நடக்கப்பெற்றது தாங்களே ஷை மகாநாட்டில் ஒப்புக்கொண்டவர்கள் தாங்களும், வாலிபர்களுக்கென இயற்றப்பட்ட கிளர்ச்சி தங்கி வளர்ந்து பெரியவர்கள் கவனிக்க முடியாத சமூக சீர் திருத்தத்தை வளர்ச்சி செய்ய வேண்டியதால் எங்கும் வாலிபர் சங்கங்கள் இயற்றுவிக்கப் படவேண்டுமென்று பேசினீர்கள். இது திருச்சி மாயவரம் முதலிய மகாநாடுகளும் வெகு உற்சாகத்துடன் வேலை செய்தன. ஆனால் நம் கட்சி இப்போது இருக்கும் நிலைமையை தாங்களுமறிவீர்களென நம்புகிறேன். தாங்களைப் போன்ற மேடை வீரர்களில் சிலர் கோயம்புத்தூர் மகாநாட்டில் நடந்து கொண்டதே அதற்குதாரணமென்று திட்டமாய்கூறுவேன். காங்கிரசில் சேரவேண்டும், பார்ப்பனர் ஆதிக்கத்தை ஒழிக்கவேண்டும், காங்கிரசைக் கைப்பற்றி சுயராஜ்யம் வாங்கவேண்டும் என்று பறைசாற்றி 3 மாதம் முயன்று ஜில்லா மகாநாட்டை ஸ்பெஷல் மகாநாடாக திருத்தி வேலை செய்து, மேடையில் பேசினார்களே, ஆர்ப்பாட்டம் செய்தார்களே! அவர்கள் இப்போது எங்கே என்று பார்த்தால் எமது வீரர் சொல்வது போல் விலாசம் தெரியவில்லை காங்கிரசில் சேர்ந்தார்களா? இல்லை. கைப்பற்றினார்களா? ஆதிக்கத்தை ஒழித்தார்களா? சென்ன காங்கிரசின் போது ஏதோபுரட்டிவிடப் போவதாக ஆகாயக் கோட்டை கட்டினார்கள். அவை யெல்லாம் என்ன வாயின. ஒன்றும் முடியவில்லை என்றே நினைக்கிறேன். ஷை மகாநாட்டில் இன்னும் நிறைவேறிய தீர்மானங்களோ மிகவும் வேடிக்கை. இவைகளாலேயே நம் கட்சி பலம் இப்போது உடைந்து விட்டதெனவே கூறுவேன் வீரர். சர் கே. வி. ரெட்டி நாயுடு ஒருவரே வீரர். அவரின் அபிப்பிராயமே சாலச்சிறந்தது. அவரைக் குற்றஞ் சொல்லுபவர் தக்கிலையுணராதாரே. ஆனால் ரெட்டி நாயுடு சொல்லுவது போல் பார்ப்பனரை நம்பி பார்ப்பன வலையில் சிக்குண்டிருக்கும் பிரதம மந்திரியை ஆதரிப்பதுகூடாத காரியமே. ஆனால் சர். கூர்மா அவர்களின் கொள்கையே மேன்மையுடைத்து. எம் வீரர் வைக்கம் நாயக்கரே போன்று பார்ப்பன ஆதிக்கத்தை சகல துறையிலும் விலக்கி, வழி காட்டிய வீரர் அவரே. ஸ்ரீமான் நாயக்கர் சொல்வதே போன்று நம் கட்சி தோற்றுவிக்கப்பட்ட காலத்து நாயர் பெருமானும், சர். தியாகராயரும் பணக்காரர்களுக்காகவல்ல ஆனால் நம் கட்சியார் மந்திரிகாலத்தில் அக்கொள்கைகளை கொண்டு வந்து விட்டதின் பயனே சென்ற நவம்பர் வீழ்ச்சிக்கு காரணம். நாயக்கர் அவர்களின் கொள்கையின்படி நம் கட்சி 97 வீத முள்ள ஏழை மக்களாகிய நமக்கு உழைக்காலன்றி விடுதலையில்லை. தாங்கள் இப்போது நடத்தியிருக்கும் விஷயமானது இன்னும் நமது கட்சியை பின்வுபடுத்துமென நம்புகிறேன் நீங்கள் பணக்காரராயிருந்தும், தங்கள் ஜாதியார் தங்களை ஜாதியிலிருந்து விலக்கி விடுவார்களென பயந்தீர்களா? அப்படியானால் ஏழை மக்கள் அப்படி செய்ய எப்படி முன்வரக்கூடும். இல்லாமல் பெரியவர்களின் மனம் கோணாமல் அவர்கள் பிடிவாதத்துக்காக நடத்தினீர்களென்றால், தங்களின்மறுசைப் பேச்சென்ன? வாலிபர்களெல்லாம் முதிர்ந்தவர்களின் மூடக்கொள்கை பழக்க வழக்கங்களை ஒழித்து நாட்டுக்கும் சமூகத்துக்கும் விடுதலையை தேட வேண்டுமென்றும் பேசினீர்களே. ரெட்டி நாயுடு இன்னும் வாலிபர் என்றும் அதற்க உழைக்க அஞ்சமாட்டேனென்றும் சொல்லியிருக்க அவருக்கு இளமையான தாங்கள் வாலிபராகவாவது, வாலிப உலகத்தின் ஆரம்ப கர்த்தா என்ற முறையிலாவது அதன் கொள்கையைபின்பற்றக்கூடாதா? அல்லதுமாப்பிள்ளை வீட்டார் பார்ப்பன புரோகிதமில்லாவிடில் தங்கள் திருக்குமாரியை வதுவை செய்ய மறுத்தார்களா? அப்படியானால் வேறே தங்களுக்கு வரன் கிடைக்காதா? அப்படி எல்லாம் நடந்திருந்தாயிடில் தங்களின் கூற்றுதானென்னே! தயவு செய்து தாங்கள் இவைகளுக்கு சரியான பதில் முகாந்திரங்களுடன் பகருவீர்களா என்றுகேட்கிறேன்

### உத்தியோகம் கேட்பதேன்?

ஜாதியில் உயர்ந்தவர்களும், உலகம் போற்றும மகாத்மாவால் சர்டிபிகேட் கொடுக்கப்பட்டவர்களும், நமக்கு மேலாயிருந்து மோட்சமும் ஸ்வாமி தரிசனமும் மகாத்மா தரிசனமும் மூடக்கொள்கையில் அஸ்திவாரத்தை ஊன்றிப்பற்றியிருப்பவர்களும் தங்களைப் போன்ற தலைவர்களை ஏமாற்றி வருபவர்களுமாகிய பார்ப்பனர்கள் அடையட்டுமே?

இது விஷயத்தைப் பற்றி நம் "திராவிடன்" உபதலையங்கத்தில் எழுதிவிட்டபடியால் விரிக்கப் பெருகுமென சிலவற்றைச் சொல்லி முடிக்கிறேன். பழய ஆஷாட புராண சாத்திரங்களினால் நம்மை கட்டுப்படுத்தி நம்மை ஏய்த்து வயிறு வளர்த்து நான்தான் உயர்ந்தவன், நான்பிறக்கும் போதே உயர்ந்த குலத்தில் பிறந்தேன், ஆதலால் என்னை எல்லோரும் வணங்கவேண்டும், என் மூலமாய்த்தான் சுவாமியையும் முன்னோர்களையும் பார்க்கமுடியும், சம்பியில்லாதந்தி அனுப்ப முடியும், கிரணத்தின் மூலம் பச்சைப்பரிசியார்கள் அனுப்பமுடியும், என்று சர்வமும் கொண்டு கடவுளுக்கு அடுத்தவன் தான் என்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்கள் அக்கிலைய கவர்மென்டையும் ஆட்டிவிக்கும் வல்லமையுடைய பார்ப்பனர்கள், சுமார் 2000 வருடங்களுக்கு மேலாக நம்மை அடிமை படுத்தி நம்மதத்திற்கே உலைவைத்து, நம் பண்டைய ஆசாரங்களை இருந்த இடம் தெரியாமல் அடித்தவர்களும், ஆங்கிலேயரின் சட்ட திட்டங்களை கூட மனுதர்ம சாத்திரமாக்கிய பார்ப்பனர்கள், இன்னும் சொல்லக்கூடாதவனென்று அஞ்ச உத்தியோகப் பார்ப்பனன் முதல் மடைப்பள்ளி பார்ப்பனன் வரையிலுள்ள அயோக்கியக்கூட்டத்தாரை நாம் ஒழித்து சமதர்ம சாம்ராஜ்யத்தை நிலை நிறுத்த பாடுபட்டு வரும் இக்காளில் நாம் கேட்பதென்ன, நீ உயர்ந்தவன் என்பது பிசகு, கடவுள் எல்லோரையும் சமமாகவே படைத்தார், நாங்களே நேரில் கடவுளை தெரிசித்துக் கொள்ளுகிறோம், எந்த விதத்திலும் உனக்கு தாழ்ந்தவர்களல்ல, நீ நூற்றில் 3 விதம் தானிருக்கிறாய், ஆகையால் உத்தியோக முதலியவற்றில் எங்களுக்குரிய விகிதாசாரத்தின்படி எங்களுக்கு கிடைக்க வேண்டுமென்று சண்டையிடுகிறோம்: தாங்கள் முக்கிய தலைவருள் ஒருவராக கருதியிருக்கும் தாங்கள் பார்ப்பான உயர்ந்தவன் என்பதை ஒப்புக்கொண்டு விட்டதாக தெரிகிறபடியால் நாம் இனி சம உரிமையும் விகிதாசாரமும கேட்கவேண்டுவதில்லையென நம்புகிறேன். தாங்கள் ஒப்புக்கொண்டபடி நாங்களும் பின்பற்றவேண்டியதே தலைவருக்கும ஊழியர்களுக்கும் கடமையாதென்பதை தயவுசெய்து கூறுங்கள். இப்போது உத்தியோகம்பெற்றிருக்கும பார்ப்பனரல்லாதார் அனைவரையும் ராஜனாமா செய்து விட்டு பார்ப்பனருக்கு அடிமையாக வேதம் என்று சொல்லப்பட்ட அண்டப்புளுகு மூட்டையின்படி இருக்கச் சொல்லப்போகிறீர்களா? இவ்வளவு தூரம் எழுதுவதானது தலைவர் தவறிவிட்டால் பிரஜைகள் சீர்திருத்திக்கொண்டு வரவேண்டியது கடமை என்பதை உத்தேசித்துஎழுதுகிறேன். தாங்கள் இப்படியே தான் இன்னும் இருப்பேன் என்று பதிலளித்தால் உடனே நம் கட்சியிலுள்ள யாவரும் விலகி விடுவார்கள். பிறகு தாங்களும கோயமுத்தூர் மேடை பிரசங்கிகளும் தம்மிஷ்டப்படி நடத்தலாம். வைக்கம் வீரர் இவைகளை ஒழித்து சமதர்ம சாம்ராஜ்யத்தின் அவசியத்தை உடனே இந்த தலைவர்களுக்கு புகட்ட கோருகிறேன். வைக்கம் வீரர் வாழ்க!

"சுயமரியாதை நண்பன்"

# அந்தமான் தீவுகள்.

(தோற்றமும் வரலாறும்,)

மிஸ்டர். ஈ. ஹாயி என்பவர் அந்தமான் தீவின் தேங்காய் விளைவைக் குறித்து ஆராயச் சென்று மீண்டு சென்னை திரும்புமுன் அஸோஸியேடெட் பிரெஸ் நிருபர் ஒருவர்க்கு தெரிவித்ததாவது:—

அந்தமான் தீவுகள் என்பது 240 சிறு தீவுகளை உட்கொண்டதாகும். அவை வங்காள விரிகுடாவில் 219 மைல்கள் நீளமும் 32 மைல்கள் அகலமும் உள்ளதாகப் பரந்திருக்கின்றன. பூமிப் பரப்பு மொத்தம 3143 சதுர மைல்களாகும். பூகர்ப்ப தத்துவ ஆராய்ச்சியும், சில தத்துவ ஆராய்ச்சியும், அந்தமான் பழங்கதைகளும், இத்தீவுகள் வடக்கே பர்மாவிலுள்ள மிரிகேரிஸ் முனை முதல் தெற்கே சுமாத்ரா தீவிலுள்ள அச்சின் ஹெட் முனை வரை நீண்டிருந்த ஒரு உயர்ந்த மலைத் தொடரின் பகுதியென்றும், ஒரு பெரிய பூமிக் கோற்ற மாறுதலினால் ஒரு கடற்கோள் நிகழ்ந்த போது ஓர் பெரும் பிரிவு கடலுள்ளாழ்ந்தவும், அப்பிரிவிலுள்ள பன்னீராயிர மக்கள் மாளவும், இத்தீவுகளின் தொகுதி மேற்கிளம்பியதென்றும் குறிப்பிடுகின்றன. பூமி பாகத்தின் மேற்புறம் வலியற்றிருக்கும்படியான ஓர் பகுதியில் இத்தீவுகளில் சில அமைந்து கிடக்கின்றனவென்றும் அவைகளெல்லாம் நன்றாக இறுகாத நிலையிலேயே இருக்கின்றனவென்றும், பேரன் தீவிலும், நருகா தீவிலும் அடங்கிப்புகைந்து கொண்டிருக்கிற எரிமலைகளாலும், சில முக்கியமாகமுள்ள—தீவுகளில் அடிக்கடி நிகழும் கடற்கோள்களாலும் அறியக் கிடக்கின்றன. பொதுவாகக் கூறுமிடத்து இத்தீவுகளில் நிலவியற்கை, சைனுதேயக் கரையிலிருக்கும் ஜப்பான் தீவுகளின் இயற்கையை ஒத்ததென்றே சொல்லலாம். செழிப்பான வண்டல் நிறைந்ததாயிருப்பதுடன் ஆண்டு ஒன்றுக்கு 140 அங்குலம் மழை பெய்கின்றமையால் இத்தீவுகளின் பச்சை விளைவைப்போல் வேறெங்குமே பார்க்கமுடியாதென்றே கூறலாம். பருவகாலத்தில் இத்தீவுகளைப் பார்வையிடச் செல்லும் ஒருவருடைய கவனத்தை முதலாக ஈர்க்கவல்லதுயாதெனில் இத்தீவுகளிலிருக்கும் சிறு குன்றுகளெல்லாம் பசுமைநிறைந்த காடுகளாலும் செடி கொடிகளாலும் எங்கணும் நிறைந்திருப்பதே. அக்காட்டிலொன்றினுள் புகுந்து பார்த்தால் பசுமை மாறாப் பெரிய பெரிய மரங்களும் அவைகளின்மீது சன்னல் பின்னலாகப் படர்ந்திருக்கும் பிரம்பு, பழுக்கொடி முதலிய கொடிகளும, பெரிதுஞ்சிறிதுமாயிருக்கும் குத்துச் செடிகளும், அக்காட்டின் தாவர விளைவு மிகுதியை நன்கு விளக்கும். தூரத்திலிருந்து பார்ப்போருக்கு மாசுபடிந்த வெண்மேகங்களால் சூழப்பட்டுத் தோன்றுஞ் சில சிறு மலைகளும், தூரமிகுதியால் நீலமாகவே தோன்றுஞ்சில மலைகளும, எல்லாம் நீணிறக்கடலினின்றுமெழுந்து அடிக்கடி கண் கவர் வனப்புடையதாய் மாறிக்கொண்டிருக்கும் ஆகாயத்தை நோக்கி நிற்கின்ற பான்மை மறக்கொணாததொன்றாகும். எண்ணிறந்த பறவைகள் பாடிக் களிப்பெய்துகின்றன. மீன்களோ கணக்கில, காட்டுப்பன்றிகள் வேட்டை எந்நேரமுங் கிடைக்கும். புலிகள், சிறுத்தைகள், கரடிகள் என்ற இவைபோன்ற தீய விலங்குகள் கிடையா. ஆனால் விடந்தெறிக்க பாம்புகளும், தேள்களும், பெரிய சமண்டலிகளும் நிறைந்திருக்கும். இத்தீவுகளின் பெயருக்கு குரங்குமனிதர்களின் நாடு, அல்லது நாகரிகமற்ற காட்டு மனிதர்களின் நாடென்றே பொருள். சரித்திரவரலாறு நோக்கின் இத்தீவுகளில் கடற்கொள்ளையுங் கொலைகளு மதிகமாயிருந்தமையாலும் 1857-ம் ஆண்டு குதிரைக்காரர் எழுச்சியிற் சம்பந்தப்பட்டவர்களைத் தக்கவாறு தனியிடத்திற் காவலில் வைக்கவேண்டியிருந்தமையாலும இவைகள் ஆங்கிலேயர்களால் கைக்கொள்ளப்பட்டன. அத்தீவின் புராதன மக்கள் ஆங்கிலேயருக்கோ அல்லது இந்தியக் குடியோர்க்கோ பகைமை காட்டுவதில்லை. இருந்தாலும்- ஸெண்டினல், டட்லண்ட் என்ற இருதீவுகளிலுள்ள ஜாரவார் என்ற ஒரு வகுப்பினர் பகைமை பாராட்டுகின்றனர். அவ்வகுப்பினர் மிகவுங் குறைந்த தொகையினராகலின் அவர்களைப்பற்றிக் கவலையுடன் சிந்திக்கவேண்டுவதில்லை,

நெல், கேழ்வரகு, சோளம், கரும்பு, மஞ்சள், இஞ்சி, காய்கறிகள் முதலிய இத்தீவுகளில் மிக நன்றாய் விளைகின்றன. ஆனால் பார்வைக்கு எங்கும் புல் நிறைந்ததாயிருந்தாலும் கால் நடை மேய்ச்சலுக்கு அது தகுதியாகவில்லை. ஏனெனில், ஊசிபோற் குத்தும் ஒருவகைப் புல்லும் "தொட்டாற்சிணுங்கி" என்ற முட்செடிகளும் மிகுதியாய் வளருகின்றமையால் அவற்றின் முட்கள் கால் நடைகளின் வாய்ப்புறங்களில் குத்துவதால் அவைகளுக்குக் கால்களிலும் வாய்களிலும் நோய்களுண்டாகின்றன. பசுக்களையும் ஆடுகளையும் விட எருமைகளும், வெள்ளாடுகளும் நன்றாய்ப்பலுகின்றன. கோழிகளுக்கும் வாத்துகளுக்கும் பொதுவாகக் குறைவொன்றுமில்லை. ஆனாலும், ஒரோவோர் காலத்தில் அவைகள் நோய்வாய்ப்படுகின்றன. புதிதாக அத்தீவுகட்குச் செல்வோர்க்கு அதனின் வெப்பதட்பநிலை ஒவ்வாது. அதிலும் வெப்ப காலத்தில் இருக்கவே பிடியாது, மலேரியா என்ற விஷ சுரமும் அச்சுறுத்திக் கொண்டேயிருக்கும்.

ஒவ்வொரு நிர்வாகமும் அநேகமாய் அரசாங்கத்தார் கையில்தானிருக்கிறதென்று சொல்லலாம். ஒரு தீவிலிருந்து மற்றொரு தீவிற்குச் செல்ல புகைப்படகுகள் அளித்தல் முதலிய எவ்வளவோ வசதிகளை அரசாங்கத்தார் செய்திருப்பினும் அழியக்கூடிய விளைபொருள்களை யேற்றியனுப்ப அவர்கள் செய்து கொடுத்திருக்கும் வசதிகள் இன்னும சீர்திருந்தற்குரியனவாக விருக்கின்றனவென்றே சொல்லவேண்டும், நிலக் குத்தகை கொடுக்கிற ஏற்பாடு மற்றக்குத்தகையைவிடக் குத்தகையெடுப்போனுக்குக் கெடுதியளிப்பதாயும, அரசாங்கத்தாருக்கு நன்மையளிப்பதாயும் இருக்கிறது. முதலில் குத்தகையெடுக்கும்போது கொடுக்கப்பட்ட பொருள் பின்னரென்றும் மீட்கப்படமுடியாது. போதாக்குறைக்குக் குத்தகைச்சீட்டில் கண்டபடி குத்தகையெடுத்தோன் சரியாக நடந்துகொள்ளவில்லையென்று எக்கணம் அரசாங்கத்தார் தீர்மானிக்கிறார்களோ அதே கணத்தில் குத்தகைக்காரனை நீக்கிவிடுவதற்கு அவர்களுக்கு உரிமையுமிருக்கிறது. தொழில்முறை மட்டும் முதலாளிகளாலன்றி தொழிலாளிகளாலேயே கையாளப்பட்டு வருகிறது. முதலாளி ஒரு குற்றவாளியாகவும் அவன்கீழ் வேலை பார்ப்பவன் சுதந்திரமுடைய தொழிலாளியாயுமிருப்பானேயாயின் அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற குடியேற்ற முறைப்படிப் பின்னவன் விரைவில் நிலத்திற்குரியவனாகிவிடலாம். கப்பலேற்றுமதி முறைகள் இன்னும் ஆராயற்குரியனவாயிருக்கின்றன. அவற்றின் தற்கால நடைமுறை திருப்தியளிக்கக்கூடியனவாயில்லை. இவைகளைக் குறித்து அமைக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தினர் அடங்கிய ஒரு கமிட்டியார் கையில் இவைகளை விடப்பட்டிருப்பதைக்காட்டிலும இந்தியாவின் மற்றத் துறைமுகங்களிலுள்ளவாறுபோல வணிகர்களும் வியாபாரிகளுங் கொண்ட ஒரு துறைமுகக் கமிட்டியாரிடம் விடப்படுவது நன்மையளிக்கக்கூடும் என்று பெரும்பாலோரால் ஒத்துக்கொள்ளப்படுகிறது. அந்தமான் தீவுகளின் வருவாய் செலவுக்குப் போதியதாயில்லை. அதன் நிர்வாகத்தைக் குறித்து அது கைதிகளது இருப்பிடமாயிருக்கிற காரணத்தினால் இந்திய அரசாங்கத்தாரிடமிருந்து ஆண்டு ஒன்றுக்கு 41 லட்சம் ரூபாய்கள் கொடுக்கப்படுகின்றன. இச்செலவு நிர்வாக வன்மை காரணமாகக் குறைந்து ரூபா 26 லட்சத்திற்கு வந்திருக்கிறது. காட்டு வருவாய் மட்டும் இப்பொழுது 15 லட்சத்திற்கு வருகின்றது. அது இன்னும் அதிகப்படலாமென்றுந் தெரிகிறது. ஆயினும் இப்பொழுது இந்திய அரசாங்கத்தார் அத்தீவுகளுக்கு இனிக் கைதிகளை யனுப்புவதில்லையென்று தீர்மானித்துவிட்டபடியால் அத்தீவுகளின் தற்கால நிர்வாகமுறையில் சில மாறுதல்கள், ஏற்படவேண்டியது இன்றியமையாததாயிற்று. எனவே இம்மாறுதல்களைக் குறித்து உள்நாட்டு நிர்வாகிகள் கவலை கொண்டிருப்பதோடு இவற்றை ஒருவாறு தீமை விளைவிக்காமல் காத்துக் கொள்வதற்காக, புதுக்குடியேற்றத்தை ஆதரிக்கின்றனர். அதிகம்தொழிலாளர்களாக வந்து குடியேறினால் அவர்கட்குப் போதரவு அளிக்கின்றனர். இவ்வாறு அவர்கள் தொழிலாளர்களை வசப்படுத்த எடுக்கும் முயற்சிகளும், தேர்ச்சிகளும் குறை கூறுதற்கமைந்தவையாயிருப்பினும் போகப்போக அவை முதலாளிகளுக்கு நன்மையளிக்கக்கூடியவையாயிருக்குமென்பதில் ஐயமில்லை. காப்பி, தேயிலை, ரப்பர், தேங்காய் முதலிய பயிர்த்தொழில் வருங்காலத்தில் மிக நன்றாய் விருத்தியடையலாமெனத் தோன்றுகிறது. ஆனால் அதற்கு பொருள் அதிகம் வைத்திருக்கும் முதலாளிகள் ஒன்று சேர்ந்து கூட்டுறவு முறையில் வேலைசெய்வதோடுகூட தொழிலாளிகளைச் சேர்ப்பதிலும், ஏற்றுமதி வசதிகளை ஏற்படுத்திக்கொள்வதிலும் சுதந்திரமுடையவர்க

# மதுரையில் ராஜியும் ஒற்றுமை மகாநாடும்.

மகாத்மா காந்தி பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிற விஷயத்தைப்பற்றி ராஜியோ வேறு ஏதாவது ஒரு முடிவு செய்ய பார்ப்பனரல்லாதார் தலைவர் என்கிற முறையில் உங்களை கூப்பிட்டால் வருவீர்களா என்பதாக சில பத்திராதிபர்களும் சமாச்சார வியாபார பிரதிநிதிகளும் வந்து நம்மைக் கேட்கிறார்கள்.

தவிர, மதுரையில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் ஒற்றுமை மகாநாடு என்பதாக ஒன்றைக் கூட்டி மகாத்மாவைத் தலைமையாக வைத்து பேசுவதானால் வரத்தயாராயிருக்கின்றீர்களா என்று பார்ப்பனரல்லாத பிரமுகர்களில் சிலரும் கேட்கிறார்கள். இவற்றிற்கு பதில் சொல்லவேண்டியது அவசியமாகின்றது.

முதலில் மகாத்மா கூப்பிட்டால் என்பதற்கு பதில் சொல்லிவிட்டு மகாநாட்டுக்கு பதில் சொல்லுவோம்.

மகாத்மா கூப்பிடுகிறாரா இல்லையா என்பது தெரியாமல் கூப்பிட்டால் வரத்தயாராயிருக்கிறேன் என்று சொல்ல நாம் தயாராயில்லை

அல்லாமலும் எதற்காக கூப்பிடுகிறார் என்பதும், பார்ப்பனருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் ஒற்றுமைக் குறைவாயிருக்கும் விஷயங்களில் மகாத்மா அவர்களின் சொந்த கொள்கை என்ன என்பதை நாம் அறிந்து கொள்ளாமலும், மகாத்மா அழைப்புக்கு வரும் பார்ப்பனர்கள் மகாத்மா சொல்லும் முடிவை ஒப்புக்கொள்ளத் தயாராயிருக்கிறார்களா என்பதை அறிந்துகொள்ளாமலும், அந்தப்பார்ப்பனர்கள் ஒப்புக்கொள்ளுவதை பார்ப்பன சமூகம் ஒப்புக்கொள்ளுகிறதா என்பதை அறியாமலும், திடீரென்று மகாத்மா கூப்பிட்டால் வருகிறேன், மகாத்மா சொல்வதை ஒப்புக் கொள்ளுகிறேன், என்று சொல்லுவது ஒருக்காலும் பொறுப்பை உணர்ந்தவர்கள் சொல்லும் வார்த்தை ஆகாது என்பதே நமது அபிப்பிராயம். அல்லாமலும் குருகுல விஷயத்தில பார்ப்பனர் பார்ப்பனரல்லாதாருக்கு ஏற்பட்ட தகராறைப்பற்றி மகாத்மாவால் ஒருவித பைசலும் செய்ய முடியாததோடு "இப்படித்தான் நடந்துகொள்ள வேண்டும். இது தான் சரி" என்பதாக தமது அபிப்பிராயத்தைக் கூட தைரியமாய் சொல்ல முடியாமல் வழ வழ என்று பேசிவிட்டுப் போய்விட்டார். தவிர இந்து பார்ப்பனருக்கும்பார்ப்பனரல்லாதாருக்கும் ஏற்பட்டுள்ள பிரிவினைக்கு ஆதாரமானது என்ன என்று பார்ப்போமானால் முக்கியமாய், மூன்று விஷயங்கள் என்று கருதுகிறோம்; அவைகள் மத இயல் சமூக இயல், அரசியல் என்பவைகளாகும்.

மத இயலில் பார்ப்பனர்களுக்கும் மகாத்மாவுக்கும் எந்த நிலையிலும வித்தியாசம் ஒன்றும இல்லை என்பதே நமது அபிப்பிராயம்.

சமூக இயலில் மகாத்மா அபிப்பிராயத்தைப் பார்ப்பனர்கள், சாஸ்திரிகள், பண்டிதர்கள் முதலியவர்கள் மகாத்மாவின் நேரிலேயே ஒப்புக்கொள்ள முடியாது என்றும், மகாத்மாவை "உனக்கு ஒன்றும் தெரியாது நீ சொல்லுகிறபடி செய்விக்க உன்னாலும் முடியாது உங்கள் பாட்டனாலும் முடியாது" என்றும் சொல்லி விட்டார்கள். அதோடு மகாத்மாவின் பகுத்தறிவுக்கும் சத்தியத்திற்கும் வேத சாஸ்திரங்கள் இடங்கொடுக்கவில்லை என்றும் சொல்லி விட்டார்கள். அன்றியும் தகப்பன் குணம் மகனுக்கு பிறவியில் வருகிறது என்று முடிவு கட்டிக்கொண்டிருக்கிற மகாத்மாவானவர் சமூக நிலையில் எல்லோரும் சமம் என்று சொல்வதென்றால் அவ்வளவு சாதாரணமான காரியமல்ல. தவிர, குருகுலத்தில் தைரியமாய் முடிவு சொல்ல மகாத்மாவுக்கு முடியாமல் போனதின் காரணமே இதுதான்.

மற்றபடி மூன்றாவதான அரசியலைப்பற்றியோ வென்றால் "நான் ஒத்துழையாமைக்காரன் ஆனதால் எனக்கு உத்தியோகம், பதவி, அரசாங்க நிர்வாகத்தில் பங்கு ஆகியவைகள் எல்லாம் மிகக் கேவலம். ஆகையால் அதைப்பற்றி நான் ஒன்றும் பேசமுடியாது" என்கிறார். ஆகவே "மூன்று முனையில் மூன்று குளம்வெட்டினேன் அவற்றில் இரண்டில் தண்ணீரில்லை ஒன்று வற்றிப் போய் விட்டது" என்று சொல்வது போல் மூன்றும் மூன்றுப் போய்விட்டது இனி எந்த விஷயத்தில் மகாத்மாவின் அபிப்பிராயம் நமக்கு தெரிய வேண்டியிருக்கிறது. எந்த விதத்தில் அவரது பைசல் நமக்கு செல்லுபடி உள்ளதாகும் என்பதை யோசித்தால் நாம் போகலாமா போகவேண்டாமா என்பது விளங்காமல் போகாது. மகாத்மா பெரியவர் என்கிற முறையில் மகாத்மாவை மதிப்பதைப்பற்றி நமக்கு பிரமாதமான ஆட்சேபனை ஒன்றும் இல்லை. அவருக்கு வேண்டிய சவுகரியம் உபசாரம் செய்வதிலும ஆக்ஷேபனை இல்லை. ஆனால் இப்பொழுதோ மகாத்மாவுக்கு எங்கு பார்த்தாலும சங்கராச்சாரிக்கும் கவர்னருக்கும் இருக்கிற கவுரவம் போல் எங்கள் வீட்டுக்கு வாருங்கள், எங்கள் வீட்டுக்கு வாருங்கள், என்பதாக 1000, 500 கொடுத்து கூப்பிட்டு மரியாதை செய்ய ஆள்கள் மலிந்து இருக்கும் போது, நாம் மேலே விழுந்து அவருக்குச் செய்து கொடுக்கவேண்டிய சவுகரியங்களாவது உபசாரங்களாவது பாக்கி இருக்கிறதா என்பது நமக்குப் புலப்படவில்லை. நிற்க,

நாமும் மகாத்மாவுடன் பேசியதாக இருக்கட்டும் என்பதாக கருதி ஏதாவது காரணத்தின்பேரில் மகாத்மாவைக் காணப்போவதானது மகாத்மாவுக்கு மிகுதியும் தொந்திரவு கொடுப்பதாகும். ஏனென்றால் இது சமயம் யாரோ இரண்டு பேரிடம் தன்னை ஒப்படைத்து, அவர்களது திருப்திக்காக எவ்வளவோ காயாலாவுக்குயிடையில நமது நாட்டில் சுற்றுப்பிரயாணம்செய்யும்போதும் அழைத்து வந்தவர்களும சர்வ ஜாக்கிரதையாய் தங்கள் விஷயம தவிர வேறு விஷயம் அவருக்கு தெரியப்படுத்தப் படாது என்ற பிரயத்தனத்தில் இருக்கும் போ

(இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க).

---

ளாயிருத்தல் வேண்டும். அதோடு விஷசுரத்தைத்தடுக்க ஆற்றலுள்ளவர்களாயுமிருத்தல்வேண்டும். (அ. பிரஸ்.)

---

கும்பகோணத்தில் 1-10-27ல் நடைபெற்ற

## நாடார் மஹாஜன சங்க

11-வது மகாநாட்டில்

திருவாளர் R. K. ஷண்முகம் செட்டியார் M L A. அவர்கள் நிகழ்த்திய

## அக்கிராசன பிரசங்கச் சுருக்கம்.

கனவான்களே!

இந்த மகாநாட்டில் தலைமை வகிக்கும்படி என்னை விரும்பியழைத்துப் பெருமைப்படுத்திய உங்களுக்கு நான் மனமார நன்றி கூறுகின்றேன்.

### வகுப்புணர்ச்சியும் தேசியவுணர்ச்சியும்.

சாதிப்பிரிவினையினால் உண்டாகும் அபாயங்களைக் குறித்து எச்சரிக்கை செய்வதும், தேசிய நோக்கத்தை முன்னிட்டு வகுப்பு வித்தியாசத்தைப் பாராட்டாம லிருத்தல் வேண்டும் என்று சொல்வதும் இத்தகைய மஹாசபைகளில் இக்காலத்தில் ஒரு வழக்கமாகப் போய்விட்டது என்னலாம். இதைப் பன்னிப் பன்னியுரைப்பவர்கள் இதன் உண்மைத் தத்துவத்தை அறிந்துள்ளார்களோ? அன்றித் தாற்காலிக நம் நாட்டின் ஒழுங்குக்குறைத்துள்ளதென்று கருதுகிறார்களோ? நான் அறியேன். தேசியம் வகுப்புணர்ச்சிக்கு முற்றிலும் வேறானது என்று உணர்வதும் இயலாததாகும்.

### சமூக வாழ்க்கை நிலையின் பயனே வகுப்புணர்ச்சியாம்.

தேசியத்தை வளர்க்குங் கருத்துடையவர்கள் இந்த உண்மைத் தத்துவத்தை அறியவில்லையோ, அறிந்து தமது கருத்தை வெளியிட்டுக்கூறி திருத்த முறையை அவலம்பிக்கத் தைரியமில்லையோ, என்னவோ? கல்வி அபிவிருத்தியாவதாக இந்தத் தடைகள் ஒழிந்து தொலைந்து போம்; தேசிய ஒற்றுமைக்கு வழியேற்பட்டுவிடும் என்று மிக்க ஆவலோடு எதிர்பார்த்திருந்தோம். இவ்வுணர்ச்சி கற்றவர்களிடத்திலேதான் மிக்க ஆவேசத்தோடு வெளிப்படுகின்றது. காங்கிரஸ் மஹாசபை ஏற்பட்டு இன்றைக்கு நாற்பத்திரண்டாண்டுகளாகின்றன. அப்படியிருந்தும் வகுப்புணர்ச்சியானது இப்படி தலைவிரிகோலமாய்க் கூத்தாடுவதைக் காணுங்கால் நமக்கு வருத்தமாகத்தானிருக்கிறது.

### தேசீய அபிவிருத்திக்கு ஜாதிப்பெருந்தடை.

இந்தக் கும்பகோணமானது இந்து சமயத்தில வைராக்கிய சித்தத்தை உடையவர்களுக்கு ஓர் அரண் என்று நான் நன்கறிவேன். மஹாத்மா காந்தியடிகளையும் குற்றங்கூறி, காங்கிரஸ் மஹாசபைக்கும எச்சரிக்கை செய்ய வல்ல பண்டித பரிஷத்துக்கு இக்கும்பகோணம் உறைவிடம் என்பதும் எனக்குத் தெரியும. அந்தப் பண்டிதர்கள் ஒருபுறமாக; தேசிய ஒற்றுமைக்குப் பெருந்தடையாய் இருப்பது ஜாதி வேற்றுமையில் பற்றுள்ளம்தான் என்று கூறுவதாலும், நமது சமுதாய வாழ்க்கைக்கு அடிப்படையாயிருக்கும்படியான இந்தப் புராதனக் கட்டுமானத்தை மூலலோஹானி செய்தாலொழிய தேசியத்தை வளர்ப்பது என்று சொல்லுவதாலும் இங்குள்ளவர்களிலும சில பேருடைய மனதை நான் புண்படுத்தினும் படுத்துபவனாவேன். இப்பெருந்தீமை நம் நாட்டில் உலாவிவருவதற்கு நாமனைவோரும் ஜவாப்தாரிகளாகின்றோம்.

### ஒடுக்கப்பட்டோரும் சுயமரியாதையும்,

நமது ஜனசமூகத்துக்குள்ளே தாழ்ந்த வகுப்பினருக்குச் சுயமரியாதை புணர்ச்சி ஏற்பட்டதும் ஜாதியேற்பாட்டோடு போர் நிகழலாயிற்று. தாழ்ந்த வகுப்பினர் என்று சொல்லப்படுபவர்களுக்குள்ளே சுயமரியாதையைக் குறித்து எழுந்த இக்கிளர்ச்சியே இந்திய தேசியம் செழித்தோங்குதற்குரிய ஓர் நல்ல அறிகுறி என்னலாம். இந்தக் கிளர்ச்சியை கிளப்பினவர்கள் கொஞ்சமும் விட்டுக்கொடுக்காமல் இந்தச் சாதிக்கட்டை எதிர்த்து வருவார்களேயானால இக்கிளர்ச்சி நியாயமானது, பயன் தருவது, என்று சொல்ல இடம் தரும். ஒரு வகுப்பு மற்றொரு வகுப்பைத் தன்னிலும் அந்தஸ்தில் தாழ்ந்தது என்று எண்ணுமானால் அவ்வகுப்புக்கு சமூக அந்தஸ்தில் சம உரிமையடைய நியாயமாக பாத்தியமுண்டாகுமா? பூர்வீகமான வம்ச சரித்திரத்தை அனுசரித்து நீங்கள் மேல் நிலையை அபேக்ஷிப்பதற்கு இடமுண்டு என்பதைப் பாராட்டிக்கொண்டு சம உரிமைப் போர் நிகழ்த்தாமல் 'நாங்களும் மனிதப் பிறப்பினரே; நாங்கள் சமமாக பாவிக்கதற்குத் தகுதி யுடையோம்' என்னும் நியாய வழியானதும் மறுக்க முடியாததுமான காரணத்தையே முன்னிட்டு போர் நிகழ்த்திவருதல் விரும்பத்தக்கது. இங்ஙனமே ஒவ்வொரு வகுப்பும் தன் தன் உரிமையை நிலைநாட்ட முற்படுமாயின் சமூகச் சீர்திருத்தமும், தேசியக் கட்டுமானமும் இப்போதைவிட வெகு விரைவாகவே அபிவிருத்தியடைந்துவிடுமன்றோ!

### தக்க சிகிச்சை.

சமூகச் சீர்திருத்தத்தில் முனைந்து வேலை செய்கிறவர்கள் கொஞ்சமும் விட்டுக்கொடுக்காமல் சிகிச்சை முறைகளை அனுசரித்தல் வேண்டும். முஸ்தபா கமால்பாஷாவானவர் கண்டிப்போடு அடிவேரையே பற்றுவதாகிய முறையைக் கைக்கொண்டதினால்தானே துருக்கியர்கள் முன்னேற்றமடையுமாறு செய்தனர். பயந்து பயந்து செய்யத் தலைப்பட்டால் வருஷம் நூறானாலும் என்ன பலன் கிடைக்கும்? சீர்திருத்த விஷயத்தில் சாஸ்திர சம்பிரதாயத்தை எடுத்துக் காட்டுகிறவர்களோடு எனக்குக் கொஞ்சமும் அநுதாபம் கிடையாது. ஏனெனில் சாஸ்திரங்கள் நிறு திட்டமான வழியைக் கற்பிக்கமாட்டா என்பது திண்ணம். ஒரு விஷயத்தை நாட்டுதற்கு காந்தியடிகள் சாஸ்திரங்களிலிருந்து இரண்டு ஸ்லோகங்களை மேற்கோளாக எடுத்துக் காட்டினால் அதற்கு மாறாக கும்பகோணத்துப் பண்டிதர்கள் இருபது ஸ்லோகங்களை எடுத்துக்காட்டி வாதிப்பார்களே. புராதன சாஸ்திரங்களைத் துணைகொண்டு கிளம்பும் சீர்திருத்தக்காரர்கள் மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்கியவரே யாவார்கள். பகுத்தறிவுகொண்டு நிச்சயித்துக் கொள்ளக்கூடிய ஒழுக்க விதிகளுக்கெல்லாம் பழைய செல்லரித்துப்போன சாஸ்திரத்தைத் தேடியலைவதைவிடக் கேடான அடிமை வாழ்வு வேறேயுண்டோ?

### தேசீயத் தொடர்பில் வலியற்ற பகுதி பிற்போக்கான வகுப்புகளே.

நமது சமுதாயத்தில் அடிப்படையான மாறுபாடுகள் ஏற்படவேண்டும்; ஜாதிக்கட்டு ஒழியவேண்டும். "சமூக சீர்திருத்தத்திற்கு சாதகமான வழிகள் இவைதாம். இவ்வழிகளைக் கையாடித்தான் தீரவேண்டும்" என்று உறுதிச் சொல்ல நமக்குத் திடமில்லையாயின் நமது செய்கையெல்லாம் வீண்செய்கையாய்க் கழியும், காலமும் வீண் காலக்ஷேபமேயன்றோ. நமது நாட்டிலுள்ள மனோதிடம் வாய்ந்த பெரியோர்கள் 'ஜாதிக்கட்டு ஒழியட்டும்' என்று உறுதிச் சொல்ல முற்பட்டு வருவார்களானால் இந்திய தேசியவாழ்வு பலப்பட்டுப் போற்றல் படைத்ததாகும்.

பிற்போக்கான வகுப்பினர் தமது சுயமரியாதையை வற்புறுத்த முற்படுவதுதான் இந்திய தேசிய வாழ்வு வளரவும், ஜனநாயகக் கொள்கை பரவவும் முக்கிய சாதனமாகும். இவ்வகுப்பினர் இருப்பதுதான் தேசிய வளர்ச்சிக்குத் தடையாகவுள்ளது. தேசியச் சங்கிலித்தொடரில் வலிகெட்ட சங்கிலி இந்த வகுப்புதான். வகுப்புவாதக் கூட்டங்கள் கூடித் தங்கள் ஒழுக்கநிலை, பொருளாதாரநிலை இவற்றை விருத்தி செய்துகொள்ள முற்படுமானால் தேசிய அபிவிருத்திக்கு அது வெகுதூரம் உதவியாக இருக்கும். ஒரு வகுப்பு க்ஷேமமாக இருக்கவேண்டுமானால் அது பொருளாதார நிலையைத்தான் அடிப்படையாகக்கொண்டு நிற்கும். நாடார் மஹாஜன சங்கமானது தன் வகுப்பினரின் பொருளாதார நிலையை விருத்தி செய்யப் பலவேறு வழிகளில் முயன்று வருகின்றது என்பது எனக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கின்றது.

### சமுதாயவேலை நேர்வழியில் நிகழவேண்டும்.

ஏதோ ஒருசில ஏழைச் சிறுவர்களுக்குப் பணவுதவி புரிதல், அல்லது ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஸ்தாபித்தல் ஆகிய இவற்றைச் செய்துவிட்ட அளவிலே சமுதாய நன்மை நாடிய வேலைகளையெல்லாம் செய்தாய்விட்டது என்று நினைத்துக்கொள்வது சாதாரணமாக இருக்கிறது. நம்முடைய நாட்டிலே சீர்திருத்த வேலையானது வெகு தாராளமான தோரணையில் செய்யவேண்டும். ஒரு குடும்பமும் அதிலிருக்கும் கிராமமும் என்னும் இரண்டும் சமுதாயவேலைக்கு ஒருங்கே கட்டுப்பட்டதாகக் கணிகதல் வேண்டும்.

### கிராமப் புனர் நிர்மாணம்.


எந்த வகுப்பினராயினும சரி, கிராமப் புனர்நிர்மாணத் தொழிலை மேற்கொள்ளல் வேண்டும். விவசாயிகளுக்குக் குறைந்த வட்டிக்கு கடன் தந்துதவக் கூட்டுறவு முறையில் பாங்கு ஒன்றை ஸ்தாபித்து விட்டால் மட்டும் போதுமா? அந்த விவசாயியானவன் கடனிலே மூழ்கிவிடாதபடி அவனுக்குக் கூட்டுறவு முறையைக் கற்பிக்கவும் வேண்டும். கலியாணச் செலவு, சாவுச்செலவு, வியாச்சியப் பற்று, சிக்கன மின்மை, விளைவின்மை ஆகிய இவைகளே இந்தியாவில் ஒரு கிராமத்தானை கடனில் மூழ்கிவிடச் செய்வதற்குப் போதிய காரணங்களாம். கூட்டுறவு பாங்கி ஒரு கிராமத்தில் பெரும் பயனை அளிக்க வேண்டுமானால் கிராமவாசிக்கு விவாகாதி சடங்காசாரங்களில் அநாவசியமான அதிகச் செலவு செய்யாதபடி நன்றாய்க் கற்பிக்கவேண்டும். சமூக நிர்மாண வேலையில் முக்கிய நோக்கம் பொது ஜனங்களுடைய நோக்கத்தையே மாற்றுவதாக இருத்தல் அவசியமாகும்.

இந்திய கிராமங்களைப்பற்றி ஓராசிரியர் பின்வருமாறு தமது நூலில் எழுதியிருக்கிறார். "பிரிட்டிஷ் இந்தியாவில் ஐம்பது லக்ஷம் கிராமங்கள் மண் குடிசை நிறைந்தவைகளாயிருக்கின்றன. அநேகமாக அவைகளிலே ஒரு இடத்தில் மண்ணை வெட்டியெடுத்துக்கொள்வார்கள். அங்கே ஒரு பெரிய பள்ளமாய்விடும். அதன் மேட்டிலே குடிசைகட்டி விடுவார்கள். ஒரு மழைபெய்தால் அந்த பள்ளத்தில் மழைநீர் நிரம்பிவிடும். அப்புறம் அதுதான் அந்த கிராமத்துக் குளம். அதற்கப்புறம் அதிலேதான் அந்த கிராமத்தார் குளிப்பது, துணிமணிகளைத் தோய்ப்பது, பண்டம் பாத்திரங்களை துலக்குவது, கன்றுகாலிகளுக்குத் தண்ணீர் காட்டுவது, சமையலுக்குத் தண்ணீர் மொண்டுகொள்வது, அந்த குட்டையின் பக்கத்திலேதான் ஜலமல விசர்ஜனம் செய்வது, தாகசாந்தி செய்துகொள்வது, எல்லாம் அதிலேதான்." இராப்பள்ளிக்கூடங்கள் எத்தனை ஏற்பட்டாலும் சரி, கூட்டுறவு பாங்குகள் எத்தனை ஏற்பட்டாலும் சரி அவைகளாலேயே ஒரு கிராமத்தின் சுகாதார நிலைமை சீர்பெற்றுவிடுமென்று சொல்ல முடியாது. நமது ஜனசமுதாயத்தின் பழக்க வழக்கங்களையும், வாழ்க்கை முறையையும் அடியோடு மாற்றுதற்குரிய வழிவகைகளில் அவசியம் நமது கருத்தை நாம் செலுத்தல் வேண்டும்.

### சிறுவருக்கோர் முயற்சித்துறை.

'உன்னூர்க்குழை' என்பதை ஒவ்வொரு கல்விப் பேறடைந்த சிறுவனும் தனக்குரிய கடமையாகக் கொண்டொழுகட்டும். சுகாதாரம் சுகபரிபாலனம், சிக்கனம் ஊரின் க்ஷேமத்தை நாடுதலாகிய இவைகளையே தனது முழுநோக்கமாகக் கொண்டு உற்சாகத்தோடுழைக்கும் சிறுவர்களின் முயற்சியினாலே சீர்திருத்தம் கைகூடும். இப்போது நமது நாட்டிற்கு வேண்டியதெல்லாம், தங்களைக்காட்டிலும் அதிருஷ்டத்தால் குறைவுபட்டினையுடைய சகோதரர்களுடைய நிலைமையைப் பண்படுத்தத் தக்க வழியில் முயலுதற்குரிய உத்வேகமும் உபகார சிந்தையும் பெரிதும் வாய்ந்த சிறுவர்களேயாம். உங்களுடைய வகுப்பாரின் முன்னேற்றத்தைக் குறித்து "மகிமை" என்னும் சிறந்த மாமூல்படி பொருள் சேகரம் செய்கிறீர்கள் என்பதாகத் தெரிகிறது. தங்களுடைய சமூக வேலையைச் செய்துகொண்டு கிராமாந்தரங்களில் உழைக்கின்ற சிறுவர்களைக் காப்பாற்றுவதற்கு அந்த மகிமைப்பணத்தில ஒரு பகுதியைச் செலவிடுவதைவிடச் சிலாக்கியமான செலவினம் வேறே என்ன இருக்கின்றது. பால்ய விவாகக் கொடுமை உங்களுக்குள் இல்லாமலிருப்பது

(இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க.)



# குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஹூ புரட்டாசி 16உ

## 'நீலாம்பிகை திருமணம்.'

சுவாமி வேதாசலம் அவர்களின் அருமைப்புதல்வி திரு. செல்வி நீலாம்பிகையம்மைக்கும் நமது நண்பரான திருவாளர் திருவரங்கம் பிள்ளை அவர்களுக்கும் நடந்த திருமணச் சடங்கு சம்பந்தமாக சில விபரங்கள் பொது மக்கள் கவனத்தை இழுக்கும்படி நேர்ந்ததுபற்றி வருந்துகிறோம். ஆயினும் இச்சடங்கானது இது சமயம் தமிழ்நாட்டில் வெகு மும்முரமாய் நடந்துவரும் தமிழ் மக்களின் மனிதத்தன்மை உணர்ச்சியின் எழுச்சிக்கு இடையூறாய் நிற்குமோவென்னும ஐயத்தால் அவற்றை வெளியிட்டாகவேண்டிய நிலைமை ஏற்பட்டதுபற்றி வெளியிடலாயிற்று. அதற்கு சமாதானமாக பண்டிதர் ஆனந்தம் அவர்கள் எழுதிய கட்டுரையானது குளிக்கப் போய் சேற்றைப் பூசிக்கொண்டது போல் செய்துவிட்டாலும் "கண்டு களித்தோன்" என்னும் நண்பர் எழுதிய மற்றொரு கட்டுரையும் அதை ஒருவாறு திருவாளர் கா. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் சரி என்று ஒப்புக்கொண்டதாக்கலும் மக்களுக்கு திருப்தி அளிக்கும் எனக்கருதி அவ்விஷயத்தை அத்துடன் நிறுத்திவிடலாம் என்பதாக முடிவு செய்து "இவ்விஷயம் இதுடன் முடிவுபெற்றது" என்பதாக குறிப்பும் எழுதிமுடித்து விட்டோம்.

ஆனால் மறுபடியும் சுவாமி வேதாசலம் அவர்களின் சிஷ்யர்என்று சொல்லப்படுபவரான திருவாளர் பாலசுந்தரம் அவர்களால் ஒரு நீண்ட வியாசம் வெளி வந்தபிறகு இவ்விஷயம் மறுபடியும் தலையெடுக்கவேண்டியதாகிவிட்டது. இதைப்பற்றிப் பலருக்குப் பலவிதமாய் தோன்றினாலும் நம்மைப்பொருததவரை கோயிலில் சுவாமிகளுக்கு பூசை செய்யும் குருக்கள் என்பவர்களை தமிழ் மக்கள் சடங்குகளில சேர்த்துக் கொள்வதானது தமிழ் மககள் சுயமரியாதைக்கு குறைவு என்பதே நமது அபிப்பிராயம். ஆகாரங்களையும் ஆராய்ச்சிகளையும் கொண்டு குருக்கள்மார்களை ஆதி சைவர்கள் என்றோ தமிழர் என்றோ வேளாளர் என்றோ ருஜூ செய்து விடலாமானாலும், அக்குருக்கள் ஒப்புக்கொள்ளாதவரையில், அதாவது அக்குருக்கள் நமக்கு சமமானவரென்றும், நம்மைவிட உயர்ந்தவரல்லவென்றும், நம்முடன் இருத்தல் உடனுண்ணல் முதலிய காரியங்களை ஒப்புக்கொள்ளாமல் இருக்கும்போது அவர் யாராயிருந்தாலும் நமக்கு என்ன பிரயோஜனம். சாதாரணமாக 100-க்கு 75 வைணவப்பார்ப்பனர்கள் ஆதியில் இடையர் என்பது நமக்குத்தெரியும். ஸ்ரீ ராமானுஜர் காலத்தில் பார்ப்பனர்கள் ஆனவர்கள் என்பது ஆராய்ச்சி வல்லோரின் ஆராய்ச்சியின் முடிவு என்றே வைத்துக்கொள்வோம். அதனால் நமக்கு என்ன லாபம். நம்மினும் உயர்ந்தவன் என்று சொல்லிக் கொள்ளும் ஒருவனை, அதிலும் பிறவியிலேயே உயர்ந்தவன் என்று சொல்லிக்கொள்ளும் ஒருவனை உயர்ந்த தன்மையைக்காட்டுவதற்கு ஆதாரமாக பழக்கத்தில் வந்துகொண்டிருக்கிற சடங்குகளை நடத்திக்கொடுப்போனாக சேர்த்துக்கொள்ளுவதால் நாமே அவ்வுயர்வுக்கு ஆதரவு கொடுத்தவர்கள் ஆகிறோமாயில்லையா என்பது தான் நமது கவலை. ஆனால் விஸ்வகர்மாள் தேவாங்கர்கள் முதலானவர்கள் தங்களை பிராமணர்களென்றும், மற்றும் கோமட்டி செட்டியார்கள் வாணிப செட்டியார்கள் முதலானவர்கள் தங்களை வைசியர்கள் என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்களே. பூணூலும் போட்டுக்கொள்ளுகிறார்களே அவர்களையெல்லாம் நாம்பிராமண வைசிய கூட்டத்தில் சேர்த்து விடாமல் ஏன் பார்ப்பனரல்லாதாருடன் சேர்த்துக்கொண்டிருக்கிறோம் என்பதாக கேட்கலாம். இவர்களை நாம பார்ப்பனரல்லாதாருடன் சேர்த்துக் கொண்டிருப்பதை இவர்கள் ஆட்சேபிக்காமல் ஒப்புக்கொளளுகிறார்கள். ஒப்புககொண்டாலும் ஒப்புககொள்ளாவிட்டாலும் நமது சடங்குகளுக்கு நாம இவர்களை நடத்திவைக்கக் கூப்பிடுவதுமில்லை. ஆகவே இந்த சமாதானம் இவ்விஷயத்திற்கு பொருத்தமில்லை என்பதோடு இதைப்பற்றி நாம அதிகமாக விவாதிப்பதும் சரியல்ல. அல்லாமலும் இவர்களெல்லாம் அரசாங்கக் குறிப்பிலும் பார்ப்பனரல்லாதார் வகுப்பிலேயே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதை அவர்கள் ஒப்புக்கொண்டுமிருக்கிறார்கள். குருக்கள்களோ பார்ப்பனவகுப்பில் சேர்க்கப்பட்டு இருப்பதுடன் தங்களையும் பார்ப்பனர்களாகவே மதித்துக்கொண்டும் இருக்கிறார்கள். அத்தோடு பார்ப்பனர்களும், குருக்கள்களை தங்களைவிட சற்று தாழ்ந்தவர்கள் என்பதாக மாத்திரம் எண்ணிக்கொண்டு பார்ப்பனர்களுக்குள்ள உரிமைகளில குருக்கள் பிரவேசிப்பதை தடுப்பதுமில்லை. அன்றியும் பண்டிதராயுள்ள சிலர்கள் தவிர மற்றையோர இக்குருக்கள்களைப் பார்ப்பனர்கள் என்றே எண்ணிக்கொண்டும் தங்களைவிட உயர்ந்தவர்கள் என்று எண்ணிக்கொண்டுமிருக்கிறார்கள். இப்போது நமது மனிதத்தன்மை பிரசாரத்தில் முக்கியமானதெல்லாம் எவன் தன்னை உயர்ந்தவன் என்று எண்ணிக்கொண்டிருக்கிறானோ அவனை நமது சமூகச் சடங்குகளை நடத்துவிப்பதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடாதென்பதுதானே ஒழிய பார்ப்பனர் மாத்திரம் கூடாது என்பதல்ல. இத்தீர்மானம் திருவாளர் திரு வி. கல்யாணசுந்தர முதலியார் தலைமை வகித்த மாயவரம் சன்மார்க்க சங்க மகா நாட்டிலும் மற்றும் பார்ப்பனரல்லாதார் மகா நாடுகளிலும் ஏகமனதாய் தமிழ் மக்களால் செய்யப்பட்டிருக்கிறது. பார்ப்பனர்களுக்கும் நமக்கும் இருக்கும் தகராரின் முக்கியமே நம்மைவிட தான் உயர்ந்தவன் என்று எண்ணிக்கொண்டு இருப்பதுதானே தவிர வேறில்லை; தவிரவும் நமது பிரசாரத்தின் கருத்து எல்லாம் எல்லா சுயமரியாதையும், சமத்துவமும் வேண்டும் என்பது தானே ஒழிய இந்த மதம் வேண்டும், இந்த மதம் வேண்டாம் என்கிற மதப் பிரசாரமல்ல அதோடு இந்த நமது கொள்கையை ஒப்புக்கொள்ளும் எந்த மதத்தையும், எந்த சமயத்தையும், எந்த சங்கத்தையும் நாம் உபயோகப் படுத்திக்கொள்ளத் தயாராயிருப்பதுடன் அவைகளை மதிக்கவும் தயாராயிருக்கிறோம்.

இம் முறையில் பார்க்கும் போது திருச் செல்வி நீலாம்பிகை அம்மையாரின் மணச் சடங்கு சமத்துவத்திற்கு ஒத்ததல்லவென்பது தான் நமது தாழ்மையான அபிப்பிராயம். சுவாமி வேதாசலம் அவர்களும் திருவாளர்களான கா. சுப்பிரமணிய பிள்ளை வி. கல்யாணசுந்தர முதலியார் நம்முடைய சுயமரியாதை, சமத்வம், மனிதத்தன்மை ஆகிய கொள்கைகளுக்கு உடன் பட்டவர்கள் என்றும், மதசமய ஆராய்ச்சி விஷயமாய் யாராவது நமக்கு இடையூறு செய்ய வந்தால் நாம் அவைகளையும் லட்சியம் செய்யப் போவதில்லை யானாலும், அப்பேர்ப்பட்ட இடையூறுகளுக்கும் அம்முறையிலும் கூட நமக்கு இப்பெரியார்கள் பின் பலமாய் இருக்கிறார்கள் என்கிற தைரியத்திலேயே அவர்களை மலைபோல் நம்பி வருகிறோம். சைவத்தின் பெயராலும், வைணவத்தின் பெயராலும் அனேக பண்டிதர்கள் என்பவர்கள் நமக்கு இடையூறு செய்யக் காத்திருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். சில பார்ப்பனர்கள் இவற்றிற்கு உள் உளவாயிருந்து சில பண்டிதர்கள் என்னும் சமய வாதிகளைக் கிளப்பி விட்டுக்கொண்டிருப்பதும் நமக்குத் தெரியும். இதற்கெல்லாம் இவர்கள் பதில் சொல்லுவார்கள் என்கிற தைரியத்தோடே இருக்கிறோம். பண்டிதத் தன்மைவேறு, அறிவு வேறு, சமயம் வேறு என்பது நமது அபிப்பிராயம். இவை நமது நாட்டில் பிரிக்கப்படவேயில்லை. சரியானபடி உணரப் படவும் இல்லை. எந்தப்பண்டிதரைப் பார்த்தாலும் எந்த அறிவாளியைப் பார்த்தாலும் அவரவர்கள் சமயத்தை ஒட்டி பண்டிதர்களாக இருக்கிறார்களே ஒழிய அதை தனக்குள் கட்டிவைத்து விட்டு பண்டிதத் தன்மையையும், அறிவையும் பிரித்துக்கொள்வதில்லை. சமயம் என்பது அவரவர் சொந்த விஷயம், பாண்டித்தியம், அறிவு என்பது பொது விஷயம். இது யெல்லோரும் ஒப்புக்கொள்ளத் தக்கதுடன் எல்லோருக்கும் பயன் படத்தக்கது. எனவே நமது நாட்டு பண்டிதர்கள் எவ்வளவோ சிறந்தவர்களாயிருந்தாலும் பொது மக்கள் எல்லோராலும் மதிக்கப்படாமல் ஒரு கூட்டத்தாரால் மாத்திரம் மதிக்கப்படுபவர்களாக ஆகி

## அடுத்த வாரம்.

27—9—27 தேதி ஊழியன் என்னும் ஒரு பத்திரிகையின் முதல் கலத்தில் "வீணை அவதூறு" என்ற தலைப்பில் ஸ்ரீமான் காசி விஸ்வநாதன் செட்டியார் அவர்களுக்கும், ஸ்ரீமான் எஸ். ராமநாதன் அவர்களுக்கும் நடந்ததாக ஒரு சம்பாஷணை காணப்படுகின்றது. இதற்கு சமாதானம் எழுதவேண்டிய பொறுப்பு 'திராவிடனுக்கும்' 'குடி அரசுக்கும்' ஏற்பட்டதோடு ராமசாமி நாயக்கருக்கும் ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரியான ஒரு சந்தர்ப்பம் அளிக்கப் பட்டதற்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்.

எனினும் இந்த சம்பாஷணைகளில் கண்ட வர்த்தமானங்கள் முழுவதும் ஸ்ரீமான் ராமநாதன் அவர்களால் சொல்லப்பட்டது தானா என்பதை நாம் மற்றுமொரு முறை கேட்டுத் தெரிந்து கொண்டு பதில் எழுத வேண்டிய நிலைமையில் அச்சம்பாஷணையில் சிலபாகம் இருக்கின்றது.

ஆகவே அது முழுவதும் உண்மை தான் என்றாவது, உண்மையல்லவென்றாவது தெரிந்து கொண்டு அடுத்தவார ஆரம்பத்தில் எழுதுகிறோம். இதற்கு இரண்டில் ஒன்று பதில் இல்லாத பட்சம் சம்பாஷணை நடந்தது வாஸ்தவம் என்றும் அதில் கண்டது முழுதும் உண்மை என்றும் வைத்துக்கொள்ளுவோம். ஏனெனில் ஸ்ரீமான் ராமநாதன் அவர்கள் வாக்கு மூலத்திற்கு சமாதானம் சொல்லுவதில் நமக்கு சில பொறுப்பு இருக்கிறபடியால் தாமதிக்கவேண்டி இருக்கிறது. இது போலவே இரண்டொரு பெரியாரும் நமக்கு யோசனை சொல்லியிருக்கிறார்கள்.

---

விடுவதற்குக் காரணம் இது தானே ஒழிய வேறில்லை. அன்றியும் பண்டிதத் தன்மை வேறு அறிவுவேறு என்று கூட நாம் வெகு நாளாய் சொல்லிவருகிறோம். மகாத்மா காந்தியும் தன்னுடைய அறிவையும் பாண்டித்தியத்தையும் இது சமயம் ஒரு சமயத்திற்கு அடிமையாக்கி விட்டதினால் தான் அந்த சமயக்காரரால் மாத்திரம் இப்போது மதிக்க வேண்டியவர்களாகி விட்டார். எனவே சுயமரியாதைக்கும் மதத் தன்மைக்கும் ஒரு காரியம் ஒப்புக்கொள்ளப்பட வேண்டுமானால் சடங்கு செய்பவர்களுக்கும் செய்வித்துக்கொள்பவர்களுக்கும் எவ்வித வித்யாசமும், உயர்வு தாழ்வும் இல்லை என்பதாய் இருவரும் ஒப்புக்கொண்டதாக இருந்தாலொழிய அது சுயமரியாதைச் சடங்கு அறிவுச் சடங்கு என்பதாக ஒப்புக் கொள்ளத்தக்கினதல்ல என்பதையும், இனியும் இம்மாதிரி நடைபெறும் சடங்குகள் எல்லாம் பார்ப்பனீயச் சடங்குகள் என்பதாகத் தான் முடிவு பெறும் என்பதையும், சமத்துவத்திலும் சுயமரியாதையிலும் கவலையுள்ள மக்கள் திருச்செல்வி நீலாம்பிகை திருமணச் சடங்கை பின்பற்றக் கூடாதென்பதையும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

## பார்ப்பனரும் அரசியலும்

அரசியல் விஷயத்தில் நாம் பார்ப்பனர்களை நம்பக்கூடாது என்றும், அவர்களது அரசியல் நோக்கம் என்பதெல்லாம் பார்ப்பனரல்லாதாரை மிதித்து பார்ப்பனர்கள் எப்படியாவது அதிகாரத்திற்கும் பதவிக்கும் உத்தியோகத்திற்கும்வர வேண்டுமென்பதைத் தவிர வேறில்லை என்றும், பார்ப்பனர்கள் தங்களுக்கு உத்தியோகப்பதவி முதலியவைகள் கிடைக்கக்கூடும் என்று எண்ணுகிற விஷயங்களில் அதற்கு விலையாக தேசத்தை யோ மானத்தையோ நாணத்தையோ கூட விடப் பின்வாங்க மாட்டார்கள் என்றும், இந்தப்படி செய்தே நமது நாட்டை ஆயிரக்கணக்கான வருஷங்களாய் அன்னிய ஆட்சிக்கு அதாவது மனிதத் தன்மை அற்ற ஆட்சிக்கு அடிமைப்படுத்தி நமது நாட்டிற்கு அடியோடு சுயமரியாதை இல்லாமற் செய்துவிட்டார்களென்றும், இக்குணங்களான பார்ப்பனீயம் நமது நாட்டை விட்டு ஒழிந்தாலல்லது நமக்கு என்றேனுமாவது விடுதலையோ சுயமரியாதையோ ஏற்படாதென்றும் அனேக தடவைகளில் எழுதியும் பேசியும் வந்திருப்பதுடன் அதே வேலையிலேயே நமது வாழ்நாளைக் கடத்தியும் வருகிறோம்.

ஆனால் நம்மில் ஒரு சாராருக்கே, அதாவது பார்ப்பனர்களை பின்பற்றியொழிய வாழ முடியாது என்கிற கூட்டத்தாருக்கு இந்த உண்மைகள் எல்லாம் தெரிந்திருந்தாலும் அவைகளை வெளியிடுவது அவர்கள் வாழ்க்கைக்கு அசவு கரியமாய்த் தோன்றுவதோடு அதற்கு எதிர் பிரசாரமும் செய்யவேண்டிய அவசியமும் ஏற்படலாம். அந்தப்படி செய்து நாம் செய்து வருவதையும் அழித்துக் கொண்டும் வரலாம். ஆனாலும் நமது நாட்டிற்கு இப்படி உண்மைகளை வெளிப்படுத்துவதைவிட வேறு முன்னேற்ற மார்க்கம் இல்லை என்பதே நமது முடிவு என்பதோடு இந்தப்படி நாம் சொல்லுவதற்கும் சில உதாரணங்கள் காட்டுவோம்.

நமது நாட்டுக்கு புதிய சீர்திருத்தம் என்பதாக ஒன்று அரசாங்கத்தாரால் வழங்கப்பட்டவுடன் அதை ஏற்றுக் கொள்ளலாமா வேண்டாமா என்கிற விஷயத்தில் காங்கிரசுக்காரர்கள் என்பவர்களுக்கே அபிப்பிராய பேதம் ஏற்பட்டதானது சாதாரண மனிதர்களுக்குள் ஏற்பட்டதாகவும் சொல்ல முடியாது.

லோகமான்யர் என்கிற திலகருக்கும், மகாத்மா என்கிற காந்திக்கும், லோகநாயகி என்கிற பெசண்டம்மாளுக்கும் மகாகனம் என்கிற சீனிவாச சாஸ்திரிக்கும் மற்றும் இது போன்ற தலைமையும் பெருமைமையும் பிரக்யாதியும் செல்வாக்கும் உள்ளவர்கள் என்று சொல்லுபவருக்குமே அபிப்பிராயபேதம் ஏற்பட்டது. இவற்றுள் ஒரு கூட்டத்தார் சீர்திருத்தத்தை நிராகரித்து விட வேண்டுமென்றார்கள். ஒரு கூட்டத்தார் நடத்திக்காட்டி அதிலுள்ள குற்றங்களை எடுத்துச்சொல்லி திருத்தப்பாடு செய்து மேல் கொண்டு சீர்திருத்தம் கேட்கலாம் என்றார்கள். இதில் ஒப்புக்கொண்டு நடத்திக் காட்டலாம் என்று அப்போது சொன்ன கூட்டத்தில் சேர்ந்தவர்கள் தான சென்னை வாசிகளில் மைலாப்பூர் அய்யங்கார் கோஷ்டியான ஸ்ரீமான் ரங்கசாமி அய்யங்கார், சீனிவாசய்யங்கார் சத்தியமூர்த்தி, கஸ்தூரி ரங்கய்யங்கார் முதலியவர்களும், அய்யர் கோஷ்டியைச் சேர்ந்தவர்களும் மிதவாதக் கட்சியாருமான ஸ்ரீமான் சிவசாமி அய்யர், சி. பி. ராமசாமி அய்யர், சீனிவாச சாஸ்திரி, பி. என் சர்மா முதலியவர்களும், பார்ப்பனரல்லாதார் கோஷ்டியான ஸ்ரீமான் தியாகராய செட்டியார், டி. எம். நாயர், பனகால், ராஜா முதலியவர்களுமே ஆவார்கள்.

இவர்களில் அய்யங்கார் கோஷ்டியாரை அய்யர் கோஷ்டியார்கள் கட்டி சேர்க்காமல் விரட்டி விட்டதால் அவர்களுக்கு தனி இடம் இல்லாமல் பேராசையும் "சீ இந்தப் பழம் புளிக்கும்" என்று சொல்லிக் கொண்டு ஒத்துழையாமையில் வந்து சேர்ந்தார்கள். மற்ற இரு கூட்டத்தாரும் சீர்திருத்தத்தை நடத்திக்கொடுக்க முயற்சித்ததில், பார்ப்பனரல்லாதார் கட்சியார் ஜனங்களிடை செல்வாக்குப் பெற்று தேர்தலில் வெற்றி பெற்றார்கள். தோல்வியுற்ற அய்யர் கட்சி சர்க்காரிடம் செல்வாக்குப் பெற்று உத்தியோக வெற்றி பெற்றார்கள். அதன் பலன்தான் இப்போது ஸ்ரீமான்கள் சீனிவாச சாஸ்திரி மாதம் 4000 ரூ சம்பாதிக்கும் தென் ஆப்பிரிக்கா கமிஷனரானதும், சி. பி. ராமசாமி அய்யர் மாதம் 5500 ரூ: சம்பாதிக்கும் சட்டமெம்பர் ஆனதும், பி. என். சர்மா மாதம் 6500 சம்பாதிக்கும் இம்பீரியல் கவுன்சில் மெம்பரானதும், டி. ரங்காச்சாரி மாதம 3000 சம்பாதிக்கும் பைபாஸ்கோப் கமிஷனரானதும், இவர்கள் பிள்ளைகுட்டி அண்ணை தம்பி மாமன் மைத்துனன் முதலானவர்கள் உத்தியோகங்களில் இருப்பதுமாய் ஏற்பட்டது. அது போலவே தான் ஸ்ரீமான் பனகால் ராஜா, பாத்ரோ, சிவஞானம் பிள்ளை முதலியவர்களும் மாதம் 4000 சம்பாதிக்கும் மந்திரிகளானதும் என்றும் சொல்லலாம். இப்படி இருந்தாலும் ஒத்துழையாமைப் பார்ப்பனப் பத்திரிகைகளும் காங்கிரஸ் தலைவர்களும் இவர்களைப் பின்பற்றும் பார்ப்பனரல்லாத சில கூலிப்பத்திரிகைகளும், போலித்தலைவர்களும் வயிற்றுச் சோற்று தேசபக்தர்களும் பார்ப்பனரல்லாதார் கட்சியை வைது அவர்களை அந்த ஸ்தானத்தில் இருந்து விரட்டி, பார்ப்பனர்களையாவது அவர்களது அடிமைகளையாவது அந்த ஸ்தானத்தில்வைக்க அநுகூலமாயிருக்கும்படி பாடுபட்டார்களே ஒழிய உண்மையான ஒத்துழையாமையையாவது உண்மையான காங்கிரஸ் கட்டளையையாவது பிரசாரம் செய்தவர்களே அல்ல. அன்றியும், சட்டசபையும், சட்டமெம்பரும், சர்க்காரும் நடத்தி வரும் நடவடிக்கையை அறியமுடியாத அவ்வளவு அறிவிலிகள் அரசியலிலாவது, பொது நலவாழ்விலாவது இருக்கிறார்கள் என்று சொல்லமுடியாது. அப்படி இருந்தாலும் இபபொழுது இவர்களை ஆதரிப்பது தான் இக் கூட்டத்தாருக்கு தேசிய வேலையாக நடந்து வருகிறதே அல்லாமல் வேறில்லை. எனவே இவற்றை பார்ப்பனரல்லாத பாமர மக்கள் உணர முடியாமல்

போனதினால், பாமர மக்களுக்கு இந்தப் பார்ப்பனர்களின் அரசியல் புரட்டை வெளிக் காட்டுவதற்காக பார்ப்பனரல்லாதார் கட்சியார் தங்களுக்கு உத்தியோகம் வேண்டியதில்லை என்றும், கவர்ன்மெண்டாரை நாங்களும் திட்ட தயாராயிருக்கிறோமென்றும் சொல்லி இரட்டை ஆட்சி ஒழியுமட்டும் மந்திரி உத்தியோக மேற்பதில்லையென்றும், கவர்னரிடம் நம்பிக்கை இல்லை என்றும் தீர்மானம் செய்து, சர்க்காரையும் பலமாகத் தாக்கி பேசியும் எழுதியும் வருகிறார்கள். இதன் பலன் என்ன ஆச்சுது என்று பார்த்தால் இங்குதான் பார்ப்பனப் புரட்டை அறியும் இடம் இருக்கிறது. உடனே பார்ப்பன அரசியல் தலைவர்களில் மிக்க பிரக்கியாதி பெற்ற ஸ்ரீ சத்தியமூர்த்தி கவர்னரையும், கவர்னர் ஜனாவையும் பேட்டிகண்டு பார்ப்பனரல்லாதார் உங்களைத் தாங்காவிட்டால் அக்கரையில்லை நாங்கள் உங்கள் சர்க்காரைத் தாங்குகிறோம் என்று வாக்களித்தார் மற்றொரு காங்கிரஸ் தலைவரும் காங்கிரஸ் காரியதரிசியுமான ஸ்ரீமான் எ. ரங்கசாமி அய்யங்கார் காங்கிரஸ் முதலிய அரசியல் சங்க உத்தியோகங்களை ராஜீனாமா செய்து விட்டு சர்க்காரை தாங்கி உத்தியோகம் பெறுவதில் வெகு பாபரப்பாயிருக்கிறார் சீக்கிரத்தில் ஒரு உயர்ந்த பதவிக்கு வந்து விடவும் கூடும். தேசியப் பத்திரிகைகள் சர்க்காரையும் மந்திரிகளையும் தாங்கி எழுதிவருகின்றன. காங்கிரஸ் சங்க தலைவரான ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரோ அடக்குமுறைச் சட்டத்திற்கு ஆதரவாய் பேசி காங்கிரஸ் கட்சியை ஓட்டுக்கொடுக்கச் செய்து நிறைவேற்றி வைத்தார். இவ்வளவும் போதாக்குறைக்கு காங்கிரசுக்கும் கவர்னருக்கும் சிநேகம் செய்து வைத்து சர்க்காருக்கு காங்கிரசிடம் "அன்பு" உண்டாக்கி கவர்னரிடமே காங்கிரசுச் செலவுக்காக 500 ரூபாய் சன்மானமும் வாங்கி வந்து விட்டார். இவ்வளவும் செய்ததல்லாமல் ராமநாதபுரம் மகாநாட்டில் தலைமை வகிக்கிற ஸ்ரீமான் சத்தியமூர்த்தி மெஜாரிட்டி இருந்தால் மந்திரி வேலையை ஒப்புக்கொண்டு நடந்துக் காண்பிக்கலாமென்றும் பேசிவிட்டார். இதை 'சுதேசமித்திரனும்' ஜனங்களுக்கு நன்றாய் ஆசை ஏற்படும்படி தலையங்கமும் எழுதி ஜாடையாய் ஆதரித்து விட்டது. இவைகள் எல்லாம் தாராளமாய் தேசத்தின் பேரால் விடுதலையின் பேரால் சுயராஜ்ஜியத்தின் பேரால் வெளிப்படையாய் நடைபெறுகிறதேயொழிய இரகசியமாய் அல்ல இவைகள் இப்படி இருக்க இந்த கொள்கைகளுடன் இருந்த அய்யர் கூட்டமான மிதவாதகோஷ்டியைப்பற்றி இந்த தேசிய வாதிகள் ஒரு வார்த்தையாவது கண்டித்துப் பேசினவர்கள் அல்லவென்பதும், சட்டசபையில் மிதவாதத்தால் பதவி பெற்ற அய்யர்களைப் பற்றி ஒரு வார்த்தையாவது கண்டித்து பேசினவர்களும் அல்லவென்பதும் கவனித்து வந்தவர்களுக்கு தெரியும். ஆனால் பார்ப்பனரல்லாத கட்சியைப்பற்றியோவென்றால், பேசின வார்த்தைகளும் எழுதின எழுத்துக்களும் அளவில. "..லாம் கட்சி" "கக்கிப்பொறுக்கி" "அடிமை மக்கள்" "சர்க்கார் பூசாரி" "சாக்கார தத்துப் பிள்ளை" "பனகால ஆட்சி ஒழிக" "பனகாலை வெட்டிப் புதைக்க" ராட்சசக் கட்சி 'தியாகராயர் ஒரு சென்னை டையர்'' என்பதாகவும் இன்னமும் எத்தனையோ விதம் அதாவது பார்ப்பனரல்லாதார் தலைவர்கள் பேரில் தொழிலாளர்களை ஏவிவிட்டு அடிக்கவும் உதைக்கவும் செய்வது முதலான காரியங்களும் செய்தார்கள்.

இப்படியெல்லாம் செய்ததினுடையவும் எழுதினதினுடையவும் கருத்துக்கள் இன்னதென்று இப்பொழுதாவது நமது மக்களுக்கு விளங்கியிருக்கிறதா என்று கேட்கத்தான் இதை எழுதுகிறோம்.

எனவே பார்ப்பனர்களின் அரசியல் என்பதெல்லாம் பார்ப்பனரல்லாதாரை அடக்கி மிதித்து பார்ப்பன ஆக்ஷி பெறவேண்டுமென்பது தவிர வேறில்லை என்பதும், பார்ப்பனரல்லாதாரில் சிலர் அவர்களைப் பின்பற்றுவது என்பதையும் அப்பார்ப்பனர் சாப்பிட்டுக் கழித்த எச்சிலைக் காசைப்பட்டு திரிவது தவிர வேறில்லை என்பதையும் மக்கள் உணர்வார்களாக. இந்த இரகசியத்தை அறியாமல் பாமர மக்கள் காங்கிரசு, தேசியம் என்று கண்ணை மூடிக்கொண்டு பார்ப்பன அரசியலைப் பின்பற்றுவதும், பணங்காசுகளை அள்ளிக்கொடுப்பதும், நமது சுயமரியாதை உதயத்தை மறைப்பதே அல்லாமல் வேறல்ல என்று சொல்லி இதை முடிக்கிறோம்.

---

## குறிப்பு.

"குடிஅரசு" மலர்களில் பிரசுரிக்கப்பட்டு வரும் கைவல்ய சுவாமிகளின் வியாசங்களை திரட்டி புத்தகரூபமாக வெளியிடப் போவதால் அது புத்தகம் வேண்டுவோர் முன்னுடியே தங்கள் விலாசத்தைத் தெரிவித்து பதிவு (ரிஜிஸ்தர்) செய்துகொள்ளக் கோருகிறோம்.

வியாபார விளம்பர சந்தா விகிதம் அங்குலம் 1-க்கு தடவை 1-க்கு 8 அணாவாகக் குறைத்திருப்பதால், வியாபாரிகள் விளம்பரங்களனுப்பி வியாபாரத்தையும் "குடிஅரசையும்" விருத்தி செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

## கரூர் நகரசபைத் தேர்தல்.

இந்நகர சபைக்கு 26—9—27ல் நடந்த 3-வது வார்டு தேர்தலுக்கு 9 கனவான்கள் அபேக்ஷகராய் நின்றதில், பெஸ்ட் & Co. A. P. C. கிருஸ்ணாயில் சப் ஏஜண்டு ஈரோடு E. O. C. முத்துசாமிக் கவுண்டரின் குமாரன் E. M. கிருஷ்ணசாமி அவர்கள் அதிக வோட்டு பெற்றதால் அது வார்டுக்கு கவுன்சிலராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார் என ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

---

## மன்னார்குடி ஸ்ரீ காந்தி கதர்நூல் நிலையம்.

இது மகாத்மா காந்தியடிகள் மன்னார்குடி விஜயத்தின் ஞாபகார்த்தமாக வர்த்தக மகா ஜனங்களால் நிர்மாணிக்கப் பெற்றது.

இதில் மெம்பராக சேர விரும்புபவர்கள் தினசரி 1/2 மணிநேரத்துக்கு குறையாமல் நூல் நூற்க வேண்டும்.

மெம்பர்கள் கதரைத்தவிர மற்ற அன்னியநாட்டு உடைகள் உடுத்தக்கூடாது.

இந்நிலயத்திற்கு மளிகை தி. சுப்பிரமணியம்பிள்ளையைத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறது. இப்படிக்கு காரியதரிசி.

7ம் பக்கத் தொடர்ச்சி

நீங்கள் செய்த புண்ணியந்தான். இந்தக் கொடுமைகளை விலைக்கு வாங்கிவிடாதீர்கள். உங்களுக்குள்ளே கிறிஸ்து மதத்தை அவலம்பித்தவர்களிடத்து நீங்கள் காட்டும் சிநேகபாவத்தையும், கூட்டுறவுப் பொறுமையையும் கண்டு நான் மகிழ்வடைகின்றேன்.

## சீன தேசத்தினின்றுமோர் படிப்பினை.

இந்த நாடார் மஹாஜன சங்கமானது உங்களிலே சிறுவர்களுடைய முயற்சியினால் ஸ்தாபிக்கப் பெற்றது என்று நான் கேள்விப்படுகிறேன். இதுதான் நியாய சரி. இது போழ்து சீனதேசமானது தனது இளைஞர்களாலேயே பரிணாம தசையிலிருக்கிறது. அவர்களுள் முன்னணியில் நின்ற ஒருவர் பின் வருமாறு எழுதியிருக்கின்றார். "புதிய சீனதேசத் தலைவர்கள் வெறும் ராஜ தந்திரிகள் அல்ல, ராணுவவீரரல்ல என்பதை உலக முழுவதுக்கும் எடுத்துக்காட்டிவிட்டது. இதுவரையில் பின்னணியிலே பலவந்தமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த புத்திக் கூர்மையுள்ள சாமான்ய சிறுவர்கள் தாம் அவர்கள். முதலாவது அபினியுத்தத்துக்குப்பின் நிராட்சேபமாகத் தாங்கள் தாங்கள் அனுபவித்து வந்த உரிமைகளைக் குறித்து இனி என்னமோ என்று அயல் நாட்டினர் கருதும்படிக்கு நேர்ப்பட்டு விட்டது".

சீனதேசச் சிறுவர்கள் அந்நாட்டில் என்ன லாபத்தை அடைந்துள்ளார்களோ அடைந்து வருகின்றார்களோ, அதனையே நான் என் முன் வீற்றிருக்கும் சிறுவர்கள் பாலும் எதிர் பார்க்கின்றேன். அகங்காரப் பித்தேறிய 'மேல் ஜாதியினர்' என்போருடைய ஒடுக்கு முறைகளைப் பொருட்படுத்தாதிருப்போமாக. இன்னும் எத்தனையோ இடையூறுகள் நமக்கு எதிர்ப்படலாம். ஆனால் இயக்கத்திற்கு உயிர் கொடுத்துவிடின் அது நமக்கு நிச்சயமாய் வெற்றியைப் பயந்தே தீரும்.

---


## கதர் வேண்டுமா?

சர்கா சங்க அத்தாட்சி பெற்ற சுத்தக்கதர்
தமிழ் நாட்டுத் தலைவர்கள் நாயக்கர் நாயுடு
அவர்களால் ஆதரிக்கப்பெறும்
லக்ஷ்மி குடி நூல் கதர் சாலை
தயாரிக்கும் கதரையே
பிராமணரல்லாதார்களே ஆதரியுங்கள்.
பிராமணரல்லாதார் முதலைக்கொண்டு
முயற்சியைக்கொண்டு அவர்கள் நன்மைக்காக உழைப்பது.
உடனே முன் பணத்துடன் ஆர்டர் செய்யுங்கள்.
தபால், ரயில், கப்பல் மூலம், நிடம் சாக்கு, நியாயமான விலைக்கு அனுப்பிவைக்கப்பெறும்.
விலாசம் :
லக்ஷ்மி குடி நூல் கதர் சாலை,
(ஸ்டோர்) ஈரோடு.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தும், வேறு யாரையும் தனியாய் பேச விடாமல் எப்போதும் காவல் காத்து வரும்போதும், நாம் ஏன் அனாவசியமாய் உள்ளே புகுந்து மகாத்மா பதில் சொல்ல கஷ்டப்படும் படியான பிரசினைகளை கேட்பதும், அவர் நமக்கு அனுகூலமாய்ச் சொல்லுவதா அல்லது அவர்களுக்கு அனுகூலமாய்ச் சொல்லுவதா என்று தாக்ஷண்ணியத்திற்கு அடிமைபட்டு விழிப்பதும், கஷ்டப்படுவதுமான காரியங்களை நாம் ஏன் அவருக்கு உண்டாக்க வேண்டும்? இவற்றையெல்லாம் பார்க்கும்போது மகாத்மாவை பேசாமல் அவர் இஷ்டப்படி விட்டு அவரை க்கூட்டி வந்தவர்களாவது திருப்தி அடையும்படி விடுவது தான் சகல விதத்திலும் நன்மை என்று தோன்றுகிறது. ஒற்றுமை மகாநாடு விஷயமும் இது போலத்தான். அதாவது மகாத்மா ஒரு இடத்தில் பேசும் போது பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் விஷயமாய் ஸ்ரீமான்கள் இராமசாமி நாயக்கர் ஒரு விதமாய்ச் சொன்னார், வரதராஜுலு நாயுடு வேறுவிதமாய்ச் சொன்னார் இன்னொருவர் இந்த இரண்டுக்கும் விரோதமாய்ச் சொன்னார், நான் எதை நம்பட்டும்'' என்று பேசியிருக்கிறார். மகாத்மாவுக்கு அவரது பாரிஸ்டர் படிப்பு இதைச் சொல்ல உதவி செய்திருந்தாலும் கூட, நம்மவர்களிலும் மதம், சமுதாயம், அரசியல் ஆகிய விஷயங்களில் எல்லோரும் ஒரே அபிப்பிராயமாய் இருக்கிறார்கள் என்று சொல்லி விடவும் முடியுமா?

கோயமுத்தூர் மகா நாட்டுக்குப்பிறகு திருப்பூரில் ஒரு மகாநாடு கூட்டி பார்ப்பனரல்லாதார் பேரால் அபிப்பிராயம் வெளியானது போலும், “கோயமுத்தூர் மகாநாட்டில் இருந்து பேசி விட்டு வந்த கனவான்கள் வெளியில் வந்து பார்ப்பனரல்லாதார் தலைவர் என்கிற முறையில் அவற்றை அடியோடு திருத்தியும், மறுத்தும் மறந்தும் நேர்விரோதமாய் நடந்துகொண்டது போலும், ஜஸ்டிஸ் கட்சியாருக்குள்ளாகவே “அது நமக்கு பிடிக்க வில்லை'' “நான் அதற்கு கட்டுப்பட வில்லை'' என்று சொன்னது போலும், “ஆரம்பத்திலிருந்தே எனக்கு பேர் பிடிக்க வில்லை, பார்ப்பானை நீக்குவது பிடிக்க வில்லை. இது சமயம் நமது நாட்டுக்கு சுயமரியாதை அவசியமில்லை'' என்பதாக பல விதமாய் பேசுவதுபோலும் உள்ள எத்தனை வித அபிப்பிராய பேதப்பட்டவர்கள் நம்மிலும் இருக்கிறார்கள். இவ்வளவு பேரையும நம்மால் ஒன்று சேர்க்கத்தக்க அளவுக்கு நாம் நாட்டில் செல்வாக்குப் பெற்று விட்டோமா? இம்மாதிரி ஆள்களுக்கு நாட்டில் மதிப்பில்லாமல் செய்து விட்டோமா? அப்படி ஒன்றுமில்லாமல் ஒரு மகாநாடு கூட்டி ராஜி பேசுவதென்பது இது சமயம அவ்வளவு பொருத்தமான காரியம் என்று சொல்லிவிட முடியாது,

அல்லாமலும் இந்த பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் விஷயத்தில் பார்ப்பனரும் பார்ப்பனரல்லாதாரும் ராஜி செய்து கொள்ளவேண்டும் என்கிற எண்ணம் நிறைவேறக் காலம் வரும்போது இருசமூகத்திற்கும்

## காங்கிரஸ கங்காணிசபை

காங்கிரசில் மெம்பர்களைச் சேர்க்க எவ்வளவு நிர்ப்பந்தங்களை பார்ப்பனர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்களோ அதுபோலவே வரப்போகும் காங்கிரஸ் கூட்டத்திற்கு வாலிண்டியர்களைச் சேர்க்கவும் பல நிர்ப்பந்தங்களை வைத்து கங்காணிகளை தெரிந்தெடுக்கிறார்கள். அக்கங்காணிகள் பார்ப்பனரல்லாத சுத்தரத்தம் கடுகளவு இருந்தாலும் அவர்களை கழித்துவிட்டு தங்களுக்கு வேண்டிய வாலண்டியர்களையே தெரிந்தெடுக்க தீர்மானித்துவிட்டார்களாம். இதில் நமக்கு அதிசயம் ஒன்றுமில்லை.

ஃ ஃ ஃ

வகுப்புவாதம் செத்தது, ஆனால் சாவதற்கு முன்னாலே மறுபடியும் முளைத்தது,

மதுரையில் ஸ்ரீமான் ஜோஸப்பு தோல்வி அடைந்தார், சீரங்கத்தில் ஸ்ரீமான் K. V. இரங்கசாமி அய்யங்கார் M. L. A. தோல்வி அடைந்தார், கோவையில் C. S. ரத்தினசபாபதி முதலியார் தோல்வி அடைந்தார், சேலத்தில் ஸ்ரீமான் K. V. சுப்பாவ் தோல்வி அடைந்தார், சென்னையில் காமத்து தோல்வி அடைந்தார், பக்தவத்சலு தோல்வி அடைந்தார், எல்லாம் சக்திக் குறைவாலா அல்லது பணச்சிலவினாலா? அல்லது தேசாபிமானம் இல்லாததாலா? எதனால் தோல்வி அடைந்தார்கள், வகுப்பு வாதத்தினாலா அல்லவா? இதிலிருந்து வகுப்பு வாதம் இறந்தேபோய்விட்டதா என்று பாருங்கள்.

ஃ ஃ ஃ

சேலம் ஜில்லா மகாநாடு கூட்ட பார்ப்பனரல்லாதார் பாடுபட்டு அங்கத்தினர்களைச் சேர்த்து பார்ப்பனரல்லாதார் அதிகமாகக் கொண்ட வரவேற்பு கமிட்டி அமைத்து மகாநாட்டு வேலை ஆரம்பித்தார்கள். தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் என்னும் பார்ப்பனர்கள் அந்த வரவேற்புக் கமிட்டியை கலைத்து வேறுகூட்டம் கூட்டினார்கள். மறுபடியும் பார்ப்பனரல்லாதாரே அதிகமாகி அதே வரவேற்புக் கமிட்டியையே ஏற்படுத்தினார்கள். இது வகுப்புவாதமா அல்லவா?

ஃ ஃ ஃ

---

இது சமயம் தலைவர்களாயிருப்பவர்கள் சர்க்காரே ஒழிய வேறில்லை' அவர்கள் சொல்லும் தீர்ப்புத்தான் அமுலுக்குவரக்கூடும் அன்றியும் அத்தீர்ப்பை ஒப்புக்கொள்ளா விட்டால், நிபந்தனையும் போடுவதற்கு அவர்களால் முடியும். அந்த தீர்ப்பு இல்லாமல் ராஜியாகக்கூடிய யோக்கியதை இதுசமயம் நமது நாட்டிற்கு இல்லையென்பதே நமது அபிப்பிராயம். ஆதலால்வீணாக இம்மாதிரிகாரியங்களில் காலத்தை கடத்தி, நமது லட்சியத்திற்கும் அடிக்கடி தடங்கல் ஏற்படுத்திக் கொள்ளுவதை அடியோடு மறந்து விட்டு முன் சொன்னது போல ஜனங்களுக்கு தைரியமாய் உண்மையை எடுத்துச் சொல்லி தாங்கள் அனுபவித்துவரும் இழிவிலிருந்து மீளுவதற்கு ஆசையையும் ஆற்றலையும் உண்டாக்க வேண்டியதே நமது முக்கிய கடமை.

இந்துமுஸ்லீம் ஒற்றுமை மகாநாடு கூட்டி ஒரு கமிட்டி ஏற்படுத்தினார்கள். அதில் சென்னைப் பிரதிநிதிகளாக மூன்றுபேரை நியமித்தார்கள் அந்த மூன்றுபேரையும் பார்ப்பனர்களாகவே பொருக்கிப் போட்டார்கள். அதாவது ஸ்ரீமான் S. சீனிவாசய்யங்கார், பிரகாசம், சர். P. S. சிவசாமி அய்யர். எனவே இது வகுப்புவாதமல்லவா?

ஃ ஃ ஃ

இந்த மகாநாட்டில் பசுக்கொலையும் மேளமடித்தலையும் பற்றித்தான் பேசலாமேயொழிய அரசியல் உத்தியோகத்தைப்பற்றி பேசக்கூடாது என்று சொல்லிவிட்டதினால் அரசியலைப்பற்றி பேசாமல் மகாநாடு கூடுவதில் பிரயோஜனமில்லையென்று சொல்லி மகமதியர்கள் மகாநாட்டுக்குவர மறுத்துவிட்டார்கள். இதனால்மகாநாடுகலைந்துவிட்டது. இது வகுப்புவாதமா அல்லவா?

ஃ ஃ ஃ

சென்னையில் ராஜாராம் மோகனராய் தினம் கொண்டாடினார்கள். தலைமைவகித்த சர். சங்கரன் நாயர் ஜாதி வகுப்பு வித்தியாசம் ஒழிந்தாலல்லது இந்தியாவுக்கு விடுதலை இல்லைஎன்று முடிவுகட்டி பேசினார் இது வகுப்புவாதமா அல்லவா?

ஃ ஃ ஃ

மததூஷணைச் சட்டம் என்னும் அடக்குமுறைச் சட்டத்தை ஸ்ரீமான் S. சீனிவாசய்யங்காரும் ஆதரித்தார், லாலா லஜபதியும் ஆதரித்தார். ஆனால் லாலா லஜபதி தனக்குள்ள சிறு ஆக்ஷேபனையையும் தெரிவித்து விட்டு ஆதரித்தார், அய்யங்காரோ முழு ஆதரவும் கொடுத்து ஆதரித்தார். இப்படியிருக்க சுதேசமித்திரன் லாலாஜியை மாத்திரம் ‘லாலாஜியின் தடுமாற்றம்' என்று கண்டித்து உபதலையங்கம் எழுதியிருக்கின்றது. சீனிவாசய்யங்காரைப்பற்றி ஒரு வார்த்தை கூடஎழுதவில்லை. இது வகுப்புவாதமா அல்லவா?

---

## மதிப்புரை

### பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை

இதன் ஆசிரியர் திருவாளர் வி. கல்யாணசுந்தர முதலியாரைப்பற்றி தமிழுலகிற்கு அறிமுகஞ் செய்யவேண்டிய அவசியமின்று. அன்னார் இதுகாலை எழுதி வெளிப்படுத்தியுள்ள பெண்ணின் பெருமையென்னும் புத்தகத்தைக் கண்டு மகிழ்ந்தேன். தேனினுமினிய செந்தமிழ் நடையில் வாழ்க்கையில் பெண்ணுக்குள்ள இடத்தையும், உரிமையையும், ஆண் பெண் மாறுபாடுகளையும், பெண்பாலாரின் பெருமைகளையும், அவைகட்கேற்ப பெண்தெய்வங்களை ஆண்கள் நடத்த வேண்டிய முறையும், மற்றும் இல்லறம் துறவறம இரண்டின் விளக்கமும், பெண் ஆண்கள் தங்கள் வாழ்க்கையில் அறிந்து கொள்ள வேண்டிய பல நுட்பங்களையும், எல்லாவற்றிற்குமேல் பெண்ணின் பாலுள்ள இறையொளியையும் மிகத் தெளிவாக எடுத்து விளக்கி மற்ற பதிப்புகளைப் போலன்றி நல்லதாளில் நல்ல கட்டடத்துடன் கண்ணைக்கவரும் வகையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. பெண்களின் விடுதலை வேண்டுமென்று பாடுபடும் இக்காலத்து இத்தகைய புத்தகங்கள் பல கட்டாயம் வெளி வரவேண்டும். விலை ரூ. 2.

கிடைக்குமிடம்:— முருகவேள் புத்தகசாலை ராயப் பேட்டை, சென்னை

## பழனி தேவஸ்தான அதிகாரிகளுக்கோர் விண்ணப்பம்

க்ஷேத்திரங்களில் ஒன்றாகிய பழனியம்பதியில் ஸ்ரீ தெண்டாயுதபாணி சுவாமிகள் சன்னிதானத்தில் சில இதர ஸ்தலங்களில் ஏற்பட்டிருப்பது போல் பார்ப்பனர்களுக்கென்று தனியிடமும், பார்ப்பனரல்லாதார்களுக்கென்று தனியிடமும் ஒதுக்கி வைக்கப்படாமல், எல்லோரும் சமமாக சென்று தரிசித்து வருவது ஆதிகாலந்தொட்டே வழக்கமாயிருந்து வருவதானது நம்மவர்களின் பாக்கியமே.

ஆனால் இப்போது சிலரை மட்டும் கர்ப்பகிருகம் வரை போய் தெரிசித்து வரலாமென்றும் ஏழை பக்தர்கள் உள்ளே போய் தெரிசித்து வர உரிமையில்லை என்றும் வேற்றுமைகாட்டும்படியான நிலையில் ஒரு கர்ப்பகிருகத்துக்கும் மகாமண்டபத்துக்குமாக சேர்ந்து இரும்புகிராதிகள் போட்டு பூட்டி வைத்துக்கொண்டு, வரும் ஆசாமிகளின் அந்தஸ்துக்கும் தயவுக்குமாக ஒரு பூட்டு திறக்கப்பட்டு உள்ளே அனுமதிக்கப்படுகிறது. நாகர்களிடம் கெஞ்சி கேட்டாலும் அதிகாரதோரணையுடன் கூடிய வசைச் சொல்லே கேட்க வேண்டியிருக்கிறது. ஆகவே இது விஷயமாக தேவஸ்தான அதிகாரிகளை கேட்டுக்கொள்வதாவது:—

நாமே கட்டுவித்த நம் நாட்டு பெரும்பான்மையான கோயில்களில் நாகர்களன்னியில் சுவாமியை தரிசிக்க கூடாது என்று ஏற்படுத்தியிருக்கும் மூடப்பழக்கத்தை ஒழித்து ஏற்கனவே உள்ள உரிமைப்படி ஒவ்வொரு மக்களும் தெய்வத்தின் முன்னிலையில் சமமே என்ற சிறந்த எண்ணத்தை உலகத்துக்கு மெய்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செல்லப்பபிள்ளை

## பார்ப்பனியம் ஒழிந்த சிராத்தம்.

இவ்வூரிலுள்ள கிருஷ்ணாயில் ஏஜண்டான ஸ்ரீமான் K. ரத்தினவேல் முதலியாரது முதல் மனைவியின் சிராத்தம் இன்று நடைபெற்றது. பார்ப்பனர்களைத் தவிர்த்து சுயமாக பண்டபலகாரங்கள் செய்து எல்லோர் தாரைவார்த்து அதை பசுவுக்கு உண்பிக்கச்செய்து சிராத்த நடவடிக்கை நடாத்தி வந்த விருந்தினர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னமிட்டு சிறப்பாக நடந்தேறியது என பாலசுப்பிரமணியம் என்கிற ஒரு நிருபர் சிதம்பரத்திலிருந்து எழுதுகிறார்.

## மோக்ஷத்திற்கு டிக்கட்டு விற்கும் அயோக்கியர்களை அடியோடொழித்த திதி.

எனது ஆப்த நண்பர் சுயமரியாதைவீரர் திருவாளர் எம். செவந்திலிங்கம் செட்டியார் அவர்கள் தனது தந்தையாரின் திதியன்று எந்த தரகர்களையும் கூப்பிடாமல் தானாகவே அன்று தனது தந்தையின் படத்திற்கு புஷ்ப அலங்காரங்கள் செய்து படையல் முதலியவைகள் போட்டு அந்தப் படத்திற்கு தீபாராதனை செய்து தேவாரம்பாடி தனது தந்தையை நினைத்து ஸ்தோத்திரம்செய்து அங்கு குழுமியிருந்த தனது பந்துக்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னமிட்டு அகமகிழ்ந்தனர் என்று திருசிராபுரம் திரு. ராமதாசன் எழுதுகிறார்.

## மருஉமொழிப் பிரயோகம்

திருநெல்வேலி சைவசித்தாந்தக் கழகத்தினின்று வெளியாகும் "செந்தமிழ்ச் செல்வி" என்ற பத்திரிகையின் வைகாசி ஆனி மாதச் சஞ்சிகைகளில் ஸ்ரீமான் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் சாணார் என்ற மருஉ மொழியைத் தாராளமாய்ப் பிரயோகித்திருக்கின்றார்.

சாணார் என்பது சான்றார் என்பதின் மருஉவாக வழங்கும்மொழி. அது கல்விமான்களெவரும் வழங்குதற் குரியதன்று. நூல்வழக்கினும் பயின்றிலது. பாமரர் மட்டுமே அவ்வாறு பேசிவருகின்றனர். மூன்று என்பதற்கு மூணு என்னும், பன்றி என்பதற்குப் பண்ணி என்றும் சொல்வது இழிவாக எண்ணப்படுதல்போல் இப்பிரயோகமும் இழிவாகவே எண்ணப்படும்.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான ஏனாதிநாத நாயனார் சான்றார் குலத்தினரென்பது உலகறிந்த விஷயம்.

தேசத்தில் சாதிச் சண்டைகளுக்கிடம் வைக்காமல் சமாதானத்தை நிலைநாட்டுவது கல்வியினும், அறிவினும், ஒழுக்கத்தினும், ஆண்டினும், அநுபவத்தினும் முதிர்ந்த எவருக்கும் கடமையாம். ஆதலின் முதலியார் சாதிப்பகைச்சலை உண்டாக்கும் சாணார் என்ற மருஉமொழியை வாபஸ்வாங்கிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஆ. மதனபாண்டிய நாடார்,
சிவஞானபுரம்,
பாவூர்சத்திரம் போஸ்டு.

## திருச்சியில் சுயமரியாதைக்கு ஜே!

இவ்வூர் பெரியக்கடை வீதியில் உள்ள "பாலமுருகானந்தபவன்" என்னும் பார்ப்பன காபி ஹோட்டலில் பிராமணருக்கும் சூத்திராளுக்கும் அதிவிமரிசையாக சாப்பாடு போடப்படும் என்று எழுதப்பட்டிருந்த விளம்பரப் பலகையை எடுத்து விடும்படி சுயமரியாதை வீரர்களான திருவாளர் மணவை ரெ. திருமலைசாமி திரு கே. எ. பி. விசுவநாதம் திரு பரமசிவம், திரு ரெங்கசாமி, திருசுப்பிரமணியம், திரு வேணுகோபால், திரு கலியபெருமாள், திரு ஞானசம்பந்தம், திரு கண்ணையா, திரு வெங்கப்பய்யா முதலிய அன்பர்கள் மேல்படி ஹோட்டலின் சொந்தக்காரராகிய பார்ப்பனருக்குப் பலதடவைகளில் நியாயமான முறையில் எடுத்துச்சொல்லியும் அவர்கள் கேளாததால், பகிரங்கமாக ஒருநாள் அந்த விளம்பரப் பலகையை எடுத்துவிடாமற்போனால் சத்தியாக்கிரகம் செய்யப்படுமென அறிவிக்கப்பட்டவுடன் அவர்கள் தாங்களாகவே அந்தப் பலகையை எடுத்து இப்பொழுது பிராமணருக்கும் பிராமணரல்லாத சகோதரர்களுக்கும் அதிவிமரிசையாக சாப்பாடு போடப்படுமென்று எழுதிவைத்துவிட்டார்கள். இதேபோல் ஒவ்வொரு ஊரிலுமுள்ள சுயமரியாதை வீரர்கள் இக்காரியங்களை நடத்தவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. ராமதாசன்,

## மதிப்புரை.

### திருக்கண்ணப்பரம்மானை.

ஈரோடு மஹாஜன ஹைஸ்கூல் தமிழ்பண்டிதர் திரு தெய்வசிகாமணிக்கவுண்டரவர்கள் பக்தசிகாமணியாகிய கண்ணப்பரின் சரித்திரத்தை அம்மானை ரூபமாக இயற்றி நமது பார்வைக்கு அனுப்பியிருக்கிறார்.

தெய்வசிகாமணியவர்கள் பக்தசிகாமணியவர்களைப்பற்றி எழுதியிருப்பது சொல்லளவிலே மாத்திரமன்றிப் பொருளளவிலும் மிகப் பொருத்தமுடையதா யிருக்கிறது. வழவழவென்று வசனத்திலில்லாமலும், காடுமுரடான பாக்களாயில்லாமலும், இந்நூல் உயர்ந்த காகிதத்தில் அழகிய எழுத்தில் குறைந்த விலையில் இனிய தமிழில் பெண்டிரும் பாலரும் படிக்க பயிலும்படி அம்மானையாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டிருப்பதை நாம் மிகவும் பாராட்டுவதுடன் தற்கால தமிழ்நாட்டின் ஆவலை அநுசரித்து மற்ற தமிழடியார்களின் சரிதங்களையும் அம்மானைகளாக இயற்றி உதவும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

புஸ்தகம் 1-க்கு விலை அணா 2 தான்.

## பிராமணியமொழிந்த சடங்குகள்.

1. சங்கரலிங்கபுரத்தின்கண் சென்ற ஆவணி மாதம் ஆவணியா அவிட்டத்திற்கு நம் குல சகோதரர்களான தேவாங்கர்கள் பிராமணரை வெறுத்து கும்பம் முதலியவைகள் வைத்து பூணூல் தரித்துக் கொள்வதை நிறுத்தி நம குல சகோதரர்களாகிய புரோகிதரை வரவழைத்து ஒரு யாரைக்கொண்டு வேண்டிய சடங்குகளை யெல்லாம் நடத்தி பூணூல் தரித்துக் கொண்டார்கள். இதுபோல் எல்லா குல சகோதரர்களும் நடந்துவருவார்களென நம்புகிறேன்.

M. சவுண்டய்யா,

ஃ ஃ ஃ

2. எங்களூரில் வெகுகாலமாக முன்னோர்கள் பிராமணரைக்கொண்டு செய்துவந்த மாளயபக்ஷ சிராத்தம் 10—9—27ல் பிராமணரைநீக்கி சுயமாகநடத்தப்பட்டது என்று மானங்கல் வெங்கிட்டகிருஷ்ண செட்டிகாரு எழுதுகிறார்.

ஃ ஃ ஃ

3. நாகபட்டணம் ரயில்வே கேட்டுக்கு வடபுறம் கீழமேல் சந்திலிருக்கும் நாகை S. I Ry. Work Shop சார்ஜ்மென் R. பக்கிரியா பிள்ளை தன்னுடைய மூத்த மனைவியின் வருஷாந்திர திதியை 25—6—27 ஞாயிற்றுக்கிழமை யன்றையத்தினம் பிராமண புரோகிதமன்றி சுமார் 25 ஏழைகளுக்கு அன்னமிட்டு சிறப்பாக நடத்தினார் என்று கோ. பெரியசாமிபிள்ளை எழுதுகிறார்.

ஃ ஃ ஃ

4. நாளது பிரபவ வருஷம் புரட்டாசிமாதம் 25—9—27ல் என் தகப்பனார் பெருமாள் படையாச்சி அவர்களுக்கு திதிசெய்ய பிராமணரைநீக்கி எங்கள் வன்னியர்களில் ஒரு உபாத்தியாயரை வைத்து திதி செய்துவிட்டோம் என்று தி. பெ. வையாபுரிபடையாச்சி எழுதுகிறார்.

# திருக்குறளும் பகவத்கீதையும்.

சில நாளைக்குமுன் 'குடியரசி'லே, காந்தியடிகள், தமிழ் மக்களுக்குத் திருவள்ளுவர் திருக்குறளைப் பற்றி யாதும் புகழ்ந்து கூறாது, பகவத்கீதையைக் கற்கவேண்டுமென்று மாத்திரம் போதித்தன ரென்னுங் கருத்தமைந்த வியாசத்தைக் குறை கூறுவான் புகுந்து வேலூர்க் கிருஷ்ணமாச்சாரி யார் என்பார் செப்டம்பர் மீ 14உ ஹிந்து வெளியீட்டில் தமது குலாபிமானம் பற்றி, எதேதோ குழறி முடித்துக் 'குடியரசு' வியாசத்தாரை இகழ்ந்து, ஜஸ்டிஸ் பத்திராதிபரைப் புகழ்ந்து, திருக்குறளைத் தாம் நன்குணராமையை வெளிப் படுத்தினர். அவர் உரைகளாற் பொதுமக்கள் மயக்காமலிருத்தற் பொருட்டுதிருக்குறள், பகவத் கீதைஎன்னும் இந்நூலியல்பினைப்பற்றிஒரு சிறிது கூறுவாம். பகவத்கீதைவாதி பிராமணமொழி யிற் கீதை எழுதியிருப்பதாகவும் அதுகாரணமா கக் 'குடியரசு' வியாசத்தார் காந்தியடிகளின்போ தனைக்குத் தடைகூறுகின்றாரென்றும் பிதற்று வது முற்றுந் தவறாகும். வடமொழியை பிரா மண மொழியென்று தக்கார்ஒருவருங் கருதமாட் டார். வட நாட்டினருக்கு வடமொழி முக்கிய மாதல் தென் நாட்டினருக்குத் தென்மொழியா கிய தமிழே இன்றியமையாததாகும். வடநாட் டினருக்குத் தமிழிலுள்ள திருக்குறளைப்பற்றி ஒன்றுந் தெரியாதிருக்கலாம். அவர்கள் தங்கள் பகவத்கீதையைப் பெரிதாகப் போற்றுவதைப் பற்றி யாருங் குறை கூறார். பகவத்கீதையினும் எத்துணையோ சிறந்த திருக்குறள், திருவாசகம், சிவஞானபோதம் முதலிய பெருநூல்களுடைய தமிழர் முன்பு பகவத்கீதையை மட்டுமே பெரி தாக எடுத்துரைத்தல் தமிழ் நூற் பெருமையறி யாதார் கூற்றேயாமென்பதே 'குடியரசு' வியாசத் தார் கருத்து.

பகவத்கீதை ஆரிய நாகரீக வர்ணமும், திருக் குறள் தமிழ்நாகரீகச் சார்பும் உடையன. தமிழ் மக்களுக்குத் திருக்குறளிலேயே அறியத்தக்கன யாவும் உள்ளன. சில திருக்குறட் கருத்துக்கள் பகவத் கீதையினும் பிற வடமொழி நூலினுங் காணப்படுவதால் திருக்குறளுக்கு வந்த இழுக்கு யாதுமில்லை. நற் கருத்துக்கள் ஆரியத்திலிருந் தாலும் ஆங்கிலத்திலிருந்தாலும் வேறு எம்மொ ழியிலிருந்தாலும் தமிழர் அவற்றை அன்னிய மென்று தள்ளுவதில்லை

அந்நிய நூலின் விதி அவிரோதமேல்
உன்னேல் பழுதென்றுளத்து

என்றதுங் காண்க.

திருக்குறளானது மக்கள் வாழ்க்கைக்கு ஒரு சிறந்த நூலாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்று நூற் பகுப்பு அமைக்கும் முறை பண் டைத் தமிழ் மறை முறை என்பதறியாதார் அது வடநூற் பகுப்புமுறை என்று பிழைபடக் கூறு வர். திருக்குறளுக்கு முன்னே இயற்றப்பட்ட எந்த வடநூலிலும் இத்துறையே காணப்பட வில்லை. அறம் பொருள் இன்பம் வீடினை நூற் பயன் என்று கூறுதல் தமிழ் வழக்கே; வடமொ ழியாளர் அவற்றைப் புருஷார்த்தம் என்றே யொழிய நூற் பயனென்று கூறவில்லை.

தமிழிலே இன்பநூலினைப் பற்றிக் கூறாத ஆசிரியர் யாருமில்லை. திருக்குறள் நூலமைப்பு பண்டைத் தமிழிலக்கண முறையைத் தழுவிய தென்றே தெளிக. ஆசிரியர் திருவள்ளுவனார் பல நீதிகளை வடமொழி நீதிசாரமெழுதிய பர்த்ரு ஹரியாரைப்போலப்பலநூலினின்றுந் திரட்டித்தொ குத்துச் செய்யுள் செய்யவில்லை. முதற்கண் திருக்குறளாசிரியர் மக்கள் வாழ்க்கையை இல்லற மென்றும், துறவறமென்றும், பகுத்து, இல்லறத் திற்கு அன்பினையும், துறவறத்திற்கு அருளினையும் உயிராக அமைத்து, பாயிரமாக நான்கதிகாரம் வகுத்து, இல்லறத்திற்குரிய பொது அறங்களை ஒன்றோடொன்று இயைபுடைய இருபத்துநா ன்கு அதிகாரங்களிலும், துறவறத்தினைப் பதி மூன்கு அதிகாரங்களிலும் கூறி, துறவறத்தைக் கூறுமிடத்துக் கடவுள், உயிர், உலகம் என்பவற் றினியல்பையும், பிறப்பின் தன்மையையும், அறி வியலையும், கேட்டல், ஆய்தல், தெளிதல், ஒன்றுபடல் என்னும் நால்வகைத்தாய ஞான நெறியினையும், பிறதத்துவ நுட்பங்களையும் விளக் கிப் போந்தமையால், திருக்குறளின் அறத்துப் பாலினைப் பல நீதிகளின் வறுந்தொகுதியென்று மாத்திரங் கொள்ளுதல் பெருந்தவறாகும். திருக் குறளின் பொருட்பாலானது, அரசர், அமைச்சர், படை, குடி, பொருள், நட்பு, அரண் என்னும் இவற்றினியல்பை முறைபட வகுத்து, ஏழுபது அதிகாரத்தாற் கூறுதலின், அரசியலறிவு, பொரு ளீட்டம், தொழில் வளர்ச்சி முதலியவற்றைப் பெரிதும் நாடும் நம்மவர் பலராலும் ஒருதலையா கக் கற்கப்படவேண்டும் பகுதியாம். திருக்குற ளிலுள்ள நூற்று முப்பத்தொன்று அதிகாரத்தின் இறுதியில் நின்ற இருபத்தைந்ததிகாரமே பண் டைத்தமிழரது அன்பிற் சிறந்த இன்பவாழ்க்கைப் பகுப்பாகிய களவியல், கற்பியல் என்னும் இரண் டினையும் கூறுவனவென்றறியாத ஜஸ்டிஸ் வியாச ஆச்சாரியார் திருக்குறள் நூலில் பாதி காமத்தைப் பற்றிக் கூறியதென்று சொல்லியது அவரது அறி யாமையை விளக்குமன்றோ!

திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த டாக்டர் ஜி. யூ. போப் என்பவர் திருவள்ளுவரைக் (seet of spotless soul and bard of universal man) குற்றமற்ற ஆன்ம அறிவு சான்ற பெருநோக்கினர் எனவும் மக்கள் சமூகத் தினர் யாவர்க்கும் பொதுவான பெரும் பாவலர் எனவுங் கூறியது காண்க. கடவுள் அம்மையப் பராய் உலகத்தைப் படைத்தவரென்றும், அவரா லே உயிர்கள் வினைப்பயனை ஊட்டப்பெற்று நில வுகின்றனவென்றும், அவரது திருவடியைத்தொ ழுதே பிறவியறுத்தல் கூடுமென்றும் வற்புறுத்துந் திருவள்ளுவரைப் புத்தரென்றும் சமணரென்றுங் கூறில் எவ்வளவு பேதமை.

இனி பகவத்கீதையினியல்பினை ஆராய்வாம். கண்ணபிரான் அர்ச்சுனனுக்குப் போர்முனையில் தேரோட்டியகாலை தனது கிளைஞரைக் கொல்ல ஒருப்படாத பார்த்தனைப் போருக்கு இசைவித் தற்பொருட்டுச் சில மொழிகளால் ஞானம் பேசி யிருத்தல்கூடுமே ஒழியப் பதினெட்டு அத்தியா யத்தையும் அச்சமயத்தில் அவனுக்கு மொழிந்தா ரென்று சொல்லுதல் அறிவிற்குப் பொருத்த மில்லாததாதலில் கண்ணன் பகவத் கீதையின் இரண்டாம் அத்தியாயத்திற் கூறிய சில மொழி களை அடிப்படையாகக் கொண்டு அந்நூல் முழு வதும் பிறரால் இயற்றப்பட்டதென்பது ஆராய்ச்சியாளர் முடிபு. தமிழாசிரியர் ஒருவரும் அவ்விதமே கூறியுள்ளார்.

பார்த்தனுயிர்த்தேறிப் படைதனைப்
பார்த்துச் சார்வைக்
கூர்த்தலம்பாலேயெய்து கொல்
நராமெனவென்னத்
தேர்த்தனிலிருந்து மாயை செய்து
மால் கொல்லச் செப்பும்
வார்த்தை நூலாக்கிக்கொண்டாய்ப்
புறங்கொள்ளான் மதித்திடாயே.

பகவத்கீதையின் தோற்றமே ஒரு மாயமாக விருக்கிறது. இக்காலத்தில் சமாதானமே நல்ல தென்று நாகரீகமுற்ற மேல்நாட்டு அரசினர் யாவரும் நன்கு ஆலோசித்து பெருங்கழகமொன்ற மைத்திருப்பதை நாமறிவோம். உற்றுறவின ரோடும் தன்னிற் பெரியாரோடும் போர்புரிய மாட்டேனென்று பார்த்தன் மறுத்தபோது இரு திறத்தாருக்கும் சமாதானம் செய்வதை விடுத்து கண்ணபிரான் அவனைப் போர்புரியத் தூண்டிய காரண மென்னவோ விளங்கவில்லை. பாண்ட வர்க் கெதிரிகளாகிய துரியோதனாதிகள் கொடி யவர்களென்றால் தங்கள் பகைவருக்குங் கொடிய வர்களாயிருந்தார்களே யொழியத் தங்கள் குடி களை வருத்தினதாகத் தெரியவில்லை. எவ்விதத் திலும் போர்த்தொழிலாகிய தங்கள் கடமையைச் செய்யவேண்டுமெனக் கீதை வற்புறுத்துதலால் அது ஆரியர் வருணதர்மத்தை ஒப்புக்கொண்ட நூலாகும். இதனாலும் அது ஒருவகையார்க்கே பலன்தருவதன்றிப் பலருக்கும்பயன்தருவதில்லை. ஆதலால் அது பொதுநூலாகாது.

கபில முனிவன் செய்த சாங்கிய நூலும் பதஞ் சலி முனிவன் இயற்றிய யோகநூலும் தோன்றிய பின்னர்த்தான் பகவத்கீதையின் பெரும் 'பகுதி எழுதப்பட்டிருத்தல் வேண்டு மென்பது அதன் மூன்றுமத்தியாயம் மூன்றாவது சுலோகத்தில் சாங்கிய நெறியும் யோகநெறியுமே இரு பெரு வழிகளாகக் கூறப்பட்டிருத்தலால் தெளியப்ப டும். அந்நூலுள் சாங்கியத்திலோதிய பிருதிவி முதல் குணதத்துவம் இறுதியாகவுள்ள இருபத்து நான்கு தத்துவங்களே இயம்பப் பட்டன. திரு மூலரது தமிழ்நூலிற் கூறும் இருபத்துநான்குக்கு மேற்பட்ட பன்னிரண்டு தத்துவங்கள் கீதையுட் கூறப்படவில்லை. பயன்கருதாது கடமைசெய்தல் திருக்குறளினுங் கூறப்பட்டது

'மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று'

என்றது காண்க

சாங்கியக் கொள்கையே கீதையின் மூன்றுமத் தியாயத்திற் பெரும்பாலுங் கூறப்பட்டது. பற் றின்றிச் செயல்செய்ய வேண்டுமென்பதே மீட்டு மீட்டு மொழிக்கப்பட்டது உலகப் பற்றறுக்கும் முறையையும் பற்றினியல்பையும ஆசிரியர் திரு வள்ளுவனார் கூறியவண்ணம் யாண்டுங் காண்ட லரிது. அதை அவாவறுத்தல் என்னும் அதிகாரத் திற் காண்க. கீதை மூன்றுமத்தியாயத்துள்ளும் நான்காவது அத்தியாயத்துள்ளும் ஆரியருக்கு முக்கியமான வேள்வியும் கூறப்பட்டது. திருவள் ளுவர் வேள்வியை அத்துணை சிறப்பாகக் கொள் ளவில்லை. கீதை நான்காமத்தியாயத்தில் பதின் மூன்றாவது சுலோகத்தில் நான்கு வர்ணங்களுங் குணகர்மங்களுக்கேற் றவாறு நான்தான் வகுக்கப்பட்ட தென்று கண்ணன் செப்பியதாகக் கேட்கின் றோம். வர்ணங்கள் பலவாயிருக்க அவை நான் கென்றது ஆரியமுறை பற்றியாமன்றோ. திரு வள்ளுவர் நூல் குலத்தைப்பற்றி யாண்டும் கூற வில்லை. ஐந்தாவதத்தியாயம் யோகமும் சாங்கி யமும் ஒரு முடிவுடையன என்று காட்டி யோக

## பார்ப்பனீயம் ஒழிந்த கதர்த் திருமணம்.

சாத்தூர் தாலூகா சிப்பிபாறை கிராமம் திரு. சாகுமாரய்ய நாயக்கர் கனிஷ்ட புத்திரன் சிரஞ்சீவி சீனிவாசனுக்கும் புளி யங்குளம் திரு. முத்துகிருஷ்ண நாயக்கர் புத்திரி சௌபாக்கியவதி நாரண அம்மாளு க்கும் மாப்பிள்ளை கிருஹத்தில் ஆவணி 13 தேதி பார்ப்பனப் புரோகிதர்களை நீக்கி குலப்பெரியோர்களைக் கொண்டு தூய கதர்த் திருமணம் இனிது நடத்தப்பட்டது என்று திரு. எஸ். சங்கர நாராயண நாயக்கர் எழு திஇரார்.

சத்தினியல்பினைச் சுட்டியது. திருவள்ளுவர் யோகத்திலும் ஞானத்தையே சிறப்பாகக்கொண்டார். ஆறுமத்தியாயம் யோகத்தினாலே ஐம்பொறியடக்குதலை விதந்தோதிற்று. திருவள்ளுவனார் அடக்கமுடைமை, தவம் என்னுமதிகாரங்களிற் பொறியடக்கத்தை தமிழ்முறையிலே அழகாகக் கூறியுள்ளார். கீதையின் எழாவதத்தியாயம் ஐம்பூதங்களினியல்பையும் பிற தத்துவங்களினியல்பையும் ஆரியமுறையில் எடுத்தோதுகின்றது. ஆசிரியர் திருவள்ளுவனார் நீத்தார் பெருமையுள்ளும் நிலையாமை என்னுமதிகாரத்தும் யாவருக்கும் பொதுப்பட உலகினியற்பினைச் சுட்டினார். அவர் 'சமயக்கணக்கர் மதிவழிகூறாது உலகியல் கூறவந்தவராதலின்' திருமூலரைப்போலத் தத்துவங்களினியல்பினை விரித்துக் கூறிற்றிலர்.

கீதையின் எட்டாமத்தியாயத்திலும் ஒன்பதாமத்தியாயத்திலும் முறையே யோகத்தாலும், பத்தியாலும் பிரமத்தை வழிபடுமுறை கூறப்பட்டது. பன்னிரண்டாமத்தியாயத்திலும் பத்தியாற் செய்யும் உருவ வழிபாட்டிற்கும் யோகத்தாற் செய்யும் அருவவழிபாட்டிற்கும் உள்ள ஒற்றுமை சுட்டப்பட்டது. ஆசிரியர் திருவள்ளுவனார் கடவுள் வாழ்த்து என்னுமதிகாரத்தில் மிகுதியும் உருவவழிபாட்டினியல்பினையும் மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில் அருவ வழிபாட்டினியல்பினையும் உரைத்துப் போந்தனர். கீதையின் பத்தாமத்தியாயத்தில் கண்ணன் யாவற்றிற்கும் இறைவனென்று கூறிய வைணவ தான் முடிபும் பதினொழாவதத்தியாயத்தில் கண்ணபிரானது விசுவரூபமென்னும் பெரு வடிவ வருணனையும் காணப்படுகின்றன. ஆசிரியர் திருவள்ளுவர் பொது நூல் கூறவந்தவராதலின் இவற்றை மொழிந்திலர். தமிழிலுள்ள வைணவ அருள் நூல்களாகிய திருவாய்மொழி முதலான இவற்றை நன்கு பகர்கின்றன. கீதையின் 13வது அத்தியாயம் சித்திற்கும் சடத்திற்குமுள்ள வேறுபாட்டைக் கூறுகின்றது. 14வது அத்தியாயம் சடத்தின் முடிவாகிய குணதத்துவத்தைக்கடக்கு முறையும், 15வது அத்தியாயம் நிற்குணத்தியானம் செய்யும் முறையையும் சாங்கிய நூலிற்கியையக்கூறுகின்றது. இவற்றிலும் சிறந்த முறைகள் திருக்குறள், திருமந்திரம் முதலிய தமிழ் நூற்களிற் காணப்படும். கீதையின் 16வது அத்தியாயத்திலும் 17வது அத்தியாயத்திலும் பொதுவாகவும் சிறப்பாகவுமுள்ள நல்லொழுக்கங் கூறப்பட்டன. இவற்றை ஆசிரியர் திருவள்ளுவனார் அறத்துப்பாலுள் விரித்துரைத்தவாறு கீதையுட் காண்டலரிது,

இதுகாறுங் கூறிய வற்றால் பகவத்கீதையானது ஆரிய முறையில் பொதுவான அறங்களைக் கூறும் ஓர் பொதுப் பகுதியையும் ஏகான்மவாதம், சாங்கியம், வைணவம் என்பனவற்றின் கொள்கைகளைக் கூறும் ஓர் சிறப்புப் பகுதியையும் உடையதென்பது புலனாகும்.

திருக்குறளானது தமிழ்மறையை ஒட்டி யாவருக்கும் பொதுவான அறங்களையும், அரசியல் உண்மைகளையும் அழகாகத் தொகுத்துரைத்தலால பகவத்கீதையினும் சிறந்ததோர் பொதுமறை என்பது தெளியப்படும்.

தமிழிலே சைவ, வைணவ வெவ்வேறு மதத்தினருக்கும் வெவ்வேறு தனிநூல்களிருப்பதினாலேயும் பகவத்கீதை ஏகாந்தமவாதச் சிறப்பாக வாதல், வைணவச் சார்பாகவாதல் உள்ள தத்துவக்கொள்கைகளைக்கூறுவதாலும் திருவள்ளுவனார் திருக்குறளினையே யாவருக்கும் பொதுவான பெருமறையாகத் தமிழர் போற்ற தற்குரியரென்றுணர்க.

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப வாறுசமயத்தார்—நன்றென
வெப்பாலவரு மியைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி

## தென் இந்திய நலவுரிமைச் சங்கக்கிளை.

25-9-27 காலை 7-மணி முதல் பகல் 1-50 வரை 2,000 ஜன சமூகங்கொண்ட கூட்டத்திற்கு ஸ்ரீமான் சிகப்பட்டி அ. பெரியசாமி பிள்ளை தலைமைவகித்தார். ஆரம்பத்தில் அக்கப்பட்டி திரு சின்னயைய்யா மூப்பன், ராமசாமி மூப்பன், ஸ்ரீமதி சிகம்பட்டி அ. பெ. வெள்ளையம்மாள் இம்மூவர்களாலும் மகாத்மாஜி கீதம் வெகு இனிமையாயும் தெளிவாயும் பாடப்பட்டன.

பிராமண மூக்கட்டும்—காந்தி மிக்கட்டும், புராணப் புரட்டும்—பூர்வீகத்திரட்டும், கைராட்டும்—கண்கண்ட லாபமும், டெந்தாய்க் குடியேறிய பிராமணனும்—பூர்வீகப் பரம்பரைத் திராவிடரும், ஆரிய கதையும்—அடிமையின் கோலமும், அகஸ்திய மூர்த்தியும்—அபார சக்தியும், மைலாப்பூர் கோஷ்டியும்—மானங்கெட்ட பேட்டியும், காட்டுப் பருத்தியும்—நாட்டின் மகத்துவமும், சிவ பக்த திரட்டும்—இந்துமதப் புரட்டும், மகத்துவக் சதரும்—மகாத்மா காந்தியும், ராச்சியத் திருட்டும்—ஜஸ்டிஸ் திட்டமும். திராவிடரும்—சிரேஷ்ட கதரும், பிராமண டூட்டியும்—பேழ்வாய்ப் பூதமும், பணக்காலசாருப—பார்ப்பன சேட்டையும், அவகர் கோவில் ரிங்காரமும்—அடிமைப் பிராமணன் ஆங்காரமும் ஆகிய விஷயங்களாக குறித்து பல பிரமுகர்கள் வெகு விஸ்தாரமாகவும் வேடிக்கையாகவும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின்னர் தேவாரம் பாடப்பட்டு வந்த ஜனோபசாரம் அளிக்கப்பெற்று கூட்டம்வெகு இனிமையாகக் கலைந்தது என்று அக்கம்பட்டி தென்னிந்திய நலவுரிமைச் சங்க கிளை காரியதரிசி திரு. வி. பெரியாண்டி மூப்பனார் எழுதுகிறார்.

## சம பந்தி போஜனம்.

அருப்புக் கோட்டை "நாடார் குலமித்திரன்" பத்திராதிபர் ஸ்ரீமான் கு. ஆ. முத்து நாடாரவர்கள் அளித்திய புத்திரி திருவளர் செல்வி தமயந்தி யம்மாளுக்கும், கைபூர் ஸ்ரீமான் ராம. தே. தங்கையா நாடாரவர்கள் சிரேஷ்ட புத்திரரும், ஆப்த நண்பருமாகிய ஸ்ரீமான் ராமசாமிக்கும மங்களகரமாய் முடிவெய்திய விவாக வைபவ தினத்தில், மணமகன் ஸ்ரீமான் ராமசாமியின் அழைப்பிற்கிணங்கி அவரது பல வருணத்திய நண்பர்களும (சுமார் 30 பேர்கள்) களிப்புடன் வந்து வைபவத்தைச் சிறப்பித்து நாமெல்லோரும் பாரதமாதாவின புத்திரர்களென்ற உணர்ச்சியுடன் பரஸ்பர வாஞ்சைமேலிட்டு சமபந்திபோஜனம்செய்துமகிழ்ந்தது குறிப்பிடத்தக்கது. நம் நாட்டை வாட்டிவரும் தீண்டாமை நோய்கொண்ட பிடிவாதக்காரர்களுக்கு ஆங்காங்குள்ள அறிவாளிகள் இத்தகைய வழியில் நடந்துகாட்டுவது ஔடதம் தந்ததொக்கும். தேசவிடுதலைக்குத் தடைக்கல்லாயிருக்கும் தீண்டாமை துகள் துகளாகப்போகும் காலம் நெருங்கிவிட்டது என்பதற்கு எங்கும் அறிகுறிகள் தோன்றுகின்றன. வைதீகக் கொள்கையினர் மனந்துடிககலாம். அவர்கள் மூடுமந்திரம் இனிப் பலிக்காது, எதிர்ப்பின் எக்கதிக்காளாவரோ!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எங்கள் இந்துமதச்சாமி இத்தனை ஆச்சாரமுடையது" என்று சுவாமி விவேகானந்தர் மேனாட்டில் சொல்லியிருந்தால் இந்து மதமும் பெருமையடைந்திருக்குமா? விவேகானந்தரை கடலில் தூக்கிப்போட்டு மிருப்பார்கள். சங்கராச்சாரியார் சொன்ன வேதாந்த மதமா அவர் சிஷ்யர்களான சுமார்த்தர்கள் அனுஷ்டிப்பது? ராமானுஜச்சாரியர் சொன்ன உபதேசங்களா அவர்கள் சிஷ்யர்கள் இப்பொழுது அனுஷ்டிப்பது? இந்து மதத்திலுள்ள வைதீகக் கொடுமையை ஒழித்தால் இந்துமதம் உயர்ந்த மதமென்று சொல்லுவதற்குத் தடையில்லையென்பதே அநேக பெரியவர்கள் கருத்து. அதைத் தெரிந்தே இந்துமத ஆபாசங்கள் ஒழியவேண்டுமென்கிறது "குடியரசு." ரிஷிகளையும் மகான்களையும் "குடியரசு" எப்பொழுதும் குற்றம் சொல்லாது. தங்கள் லாபமாகவும் தங்கள் கூட்டத்தார் லாபமாகவும் அநேக நூல்கள் செய்து ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுத்தி இதற்கு அது, அதற்கு இது பிரமாணமாகக் காண்பித்து, இவைகளை மகான்களும் ரிஷிகளும செய்தார்கள் என்று ஏமாற்றி வந்திருக்கிறார்கள், வருகிறார்கள். மகாத்மாவையும் இதற்கே உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறதை "குடியரசு" தெரிந்து ஜனசமூகத்தை அடிமைத்தனத்திலிருந்து தப்புவிக்கப் பிரயத்தனப்பட்டுக் கொண்டு வருகையில் தன் கொள்கைக்கு இடையூறுவாராமலிருக்க ஜனசமூகத்திற்கு எச்சரிக்கை செய்யவேண்டியதும் அதன் கடமையல்லவா?

ராமாயணத்தைப்பற்றி "குடியரசு" குற்றம் சொல்லுகிறதே என்று காதைப் பொத்திக்கொள்ளுகிறாய். இந்த சமயம் அடிமைமனம் ஒன்றுதான் உங்களிடமிருக்கிறது. புத்தியாவது விசாரிக்கும் அறிவாவது உங்களிடமில்லை. இருந்திருந்தால் உங்களை நரகத்திற்குள் செலுத்தாதென்று தைரியமடைந்து உண்மைக்கு சந்தோஷமும் படுவீர்கள். வியாதியஸ்தனிடம் வியாதியின் முழுரூபமும் சொல்லப்படாதாம். அதுபோல ராமாயணத்தின் முழுரூபமும் உனக்குச் சொல்லாமல் சிலதை மட்டும் சொல்லுகிறேன். ஏனெனில் உன்னுடைய மூடநம்பிக்கையின் புத்தி சிறிது சிறிதாகத்தான் தெளிவடையவேண்டும். தேவேந்திரனுக்கும் சூரியனுக்கும் வாலி சுக்கிரீபர்கள் பிறந்ததிலிருந்து வண்ணான் வார்த்தைக்காக சீதையை ராமர் காட்டிற்கு அனுப்பின கதை வரையிலும் இப்பொழுதுசொல்ல சாவகாசமில்லை. சூரியனுக்கு மகன் எப்படியுண்டானான் என்னும் உன்னால் பதில்சொல்லமுடியாத கேள்விகளையும் சொல்லமாட்டேன். குகன் வேடன் குரங்குகளும் சரியான குரங்குகளல்ல. அனுலோபப் பிரதிலோபஜாதிகள். ராகூவும் சடாயு சம்பாதி என்னும் பட்சிகளும் நீங்கள் சொல்லும் சூத்திர ஜாதியைவிட உங்கள் கணக்குப்பிரகாரம் தாழ்ந்த ஜாதிகள். அந்த ஜாதிகளெல்லாம் சிரஞ்சீவியும் மோக்ஷமும் ராமன்காலத்தில் அடைந்ததென்றும், சூத்திரன் கும்பிட்ட சாமி பிராமணப் பையனைக் கொன்றதாகவும், ராமனிடம் முறையிட பிராமணப் பையனை எழுப்பி சூத்திரப் பையனை தூக்கிவிட்டதாகவும் இது ராம ராஜ்யபாரத்தில் விசேடமென்றும் ராமாயணத்தி லிருக்கிறது. இந்த இரண்டில் எது சரியென்கிற கேள்விக்கு நீ பதில் கண்டுபிடித்தால் எங்கள் "குடியரசு" சொல்லுவது உன் காதிலும் உன்னைச் சேர்ந்தவர்கள் காதிலும் இனிமை கொடுக்கும்! (ராமாயணத்திற்குத் தனியாக ஒரு வியாசம் வேண்டுவதால் காளை.)

ஞானசூரியன் தன்கலைகளை வீசி உதயமாகும்போது அஞ்ஞானவிருள் ஓடி ஒளிய வேண்டியதுதானே. மீ. சீனிப்பாண்டியர்,
அருப்புக்கோட்டை.

# மின்சார ரசம்.

வேத அபூர்வமான மருந்து! ஆச்சரியகரமான குணம்!

இதற்கு இயற்கையாக ஒரு விதமின்சார சக்தியுண்டு

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை. அநுபான மில்லை.

மின்சார ரசம் சகல வியாதிகளுக்கும் ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று அநுபவ சித்தாந்தமாகி ஜனங்கள் தேர்ந்தெடுத்து கையாண்டு வரும் அமிர்த சஞ்சீவியாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம் மின்சார ரசம் கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியம் இராது இது இவ்வுலகுக்குள் ஒப்புயர்வற்ற பரம ஔஷதமாகும். மனிதன் தலை முதல் கால்வரையில் வரும் சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்ற தென ஜகத் பிரசித்திபெற்றது. துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம்.




குழந்தைகள் முதல் வயோதிகர் வரையில் ஸ்த்ரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில் கிடையாது. எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். உலகத்தின் நாலு திசைகளினின்றும் ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் வந்துகொண்டிருப்பதே இதற்கு போதிய சான்றாகும். இன்றைக்கே எழுதுங்கள். உங்களை ஆச்சரிய முறச்செய்யும கைகண்ட மருந்து

ஒரு புட்டியின் விலை ரூபா இரண்டே. தபால் சார்ஜ் வேறு.

விலாசம்:—**மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம்**



## பழநி சி. எம. சாமி.



# குருதாம்பரபஸ்பம்

### சகல வியாதிகளுக்கும் கைகண்டது,

திமிர், குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பத்து மேகம், தடிப்புகள், மாறி விட்டது. ஆராத குழிப்புண் ஆறிவிட்டது. இருமல் குன்மம், வெள்ளை, வெட்டை பவுத்திரம், மூலம், நீர்க்கடுப்பு, எரிச்சல் முதலிய எல்லா வியாதிகளும் தீர்ந்துவிட்டதென்று தினம்நற்சாட்சிகள் வந்த வண்ணமாயிருக்கின்றன வியாதிகளை விபரமாய் எழுதவும்.

50 நாள் 100வேளைபஸ்பமும் அனுப்பானமும் விலை ரூ. 50. 25 நாள் 50 வேளை பஸ்பமும் அனுபானமும்விலை ரூ. 25.ஏழைகளுக்குப்பாதிவிலை

இனமாய் குருதாம்பரபஸ்பம் மாதிரி பாக்கெட் விரும்புவோர் 2 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

நற்சாட்சி:—ஒரு ஊரில் இரண்டு தீராத ரோகஸ்தர்கள் நமது குருதாம்பர பஸ்பத்தால் பூர்ண குணம் பெற்று போற்றுவதை கவனியுங்கள்.

எமது ஊரில் உங்கள் பெயர் சூரியனைப்போல் பிரகாசிக்கிறது. மேகவியாதியால் ஒன்னரை வருஷகாலமாய் படுக்கையிலிருந்தவன் குருதாம்பரபஸ்பத்தால் பூர்ணகுணமானன் மூல வியாதியால் கஷ்டப்பட்ட மற்றொருவன் பூர்ண குணமானன் ஆனதால் என் வியாதிக்குத் தகுந்த மருந்தனுப்பக் கோருகிறேன்.

A M. துரைசாமி, 80-நிர் மார்க்கட் ரோடு, சூளை பெங்களூர் 11—4—27

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய ஆபீஸர்களின் நற்சாட்சிகளையும் நமது கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த **ஆயுள்வேகவைத்திய ஆசிரியர்,**

**C மலையப்பசாமி.** நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:- முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத்தெரு ஜி டி. சென்னை



## ஞான திருஷ்டி அல்லது திரிகால தீபம்.

இந்நூல் வடமொழியில் முன்னோர்களால் பனை ஓலைச் சுவட்டில் எழுதியிருந்ததை இப்போதுதான் தமிழில் புத்தக ரூபமாக அச்சிடப்பட்டது. இப்புத்தகம் ஒன்று உங்களிடம் இருக்குமானால் யார் எக் கேள்வி கேட்டாலும் யக்ஷிணியைப் போன்ற பதிலும் நீங்கள் நினைக்கும் சகல காரியத்தின் பலாபலன்களையும் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம் உங்கள் வாழ் நாள் முழுமையும் ஜோசியரைத் தேட அவசியமே இல்லை. தபாற் செலவுடன்விலை ரூ1

**ஜானகிராம் அன் கம்பெனி, வெங்கட ராமய்யர் வீதி, மதராஸ்.**



## கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்
அல்லது
8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும், எட்டுப் பக்கங்களடங்கிய

## "குடி நூல்"

என்ற கதர்ப் பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட விபரசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.



## உறையூர்
## அங்கவஸ்திரங்கள்.

அசல் 100 செ. நூலில் தயார் செய்யப் பெற்றது. பலராலும் நன்கு மதிக்கப் பட்டது. தினப்படி உபயோகத்திற்கு "ஜறா" கம்பி சதா அங்கவஸ்திரங்களை உத்தியோகஸ்தர் முதல் ஏழைவரை சாதாரணமாக உபயோகிக்கலாம்.

2¾ அகலம் 5 முழம் 1க்கு ரூ 1—12—0
ஷை சரிகை சீர் 1க்கு ரூ 1—14—0

தபால் செலவு வி. பி. வேறு

மற்றும் ஜவுளி வியாபாரிகளுக்கு வேண்டிய சரிகை போட்ட 200 செ துப்பட்டாக்கள் முதலியனவும்கிடைக்கும். கமிஷனுக்கு சகாயமாக ஆடர்படி வாங்கி அனுப்பப்படும்.

மற்ற விபரங்களுக்கு எழுதகோருகிறோம்.

விலாசம் மானேஜர்
ஸ்ரீ சௌடாம்பிகா
ஜவுளி வர்த்தகசாலை
உறையூர் போஸ்டு
திருச்சி



ஆரூடம்:—தர்ம ஞாயமான கேள்விகள் 6-க்கு விடைகளெழுதி அனுப்ப ரூ. 1. மேற்கொண்டு கேள்வி 1-க்கு அணா 4. தபால் செலவு வேறு. இதற்கு முன்பணம் தபால் செலவுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

வி. எஸ். அய்யர், சுப்பிரமண்ய உபாசி,
பழனி Palni P O. (S. I.)

# $ 500 இனும்! $ 500 இனும்!!

சதாநந்த யோகீஸ்வரருடைய **மகா வீரியவிருத்தி லேகியத்தை**

நாற்பது நாளும் சாப்பிட்டு குணமில்லையென்று நிரூபித்தாலும் சரி அல்லது இந்த லேகியத்தைப்போல் எவரேனும் செய்துகொடுப்பதாயிருந்தாலும் சரி மேல்கண்ட 500 (ரிங்கி ஐந்நூறும்) எங்கள் கம்பெனியிலிருந்து வெகுமதியாய்க் கொடுக்கப்படும்.

ஒருமுறை பரிக்ஷித்துப் பாருங்கள்.




இம்மகா வீரியவிர்த்தி லேகியமானது பெரிய தபோதனர்களால் அளிக்கப்பட்டது. இந்தலேகியம் அதி விலையுயர்ந்த பொருள்களாகிய அப்ரேக், அம்பர் கஸ்தூரி, குங்குமப்பூ, வாதாம்பருப்பு, பிஸ்தா பருப்பு இன்னுமனேகவிதமான கொட்டைகளையும், மூலிகைகளையும், பஸ்பவகைகளையுங்கொண்டு செய்யப்பட்டது. இந்த அரிய லேகியமானது இவ்வளவு உயர்ந்த பொருள்களை யடக்கியதாகயிருந்தும், இதை தனவந்தர் முதற் கொண்டு தரித்திரர் வரையிலும் யாதொரு கஷ்டமின்றி வாங்கி சாப்பிட்டு இதன் அபூர்வ சக்தியையும், துரித சௌக்கியத்தையும் அடையும் பொருட்டே மிகக்குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வருகிறது. இது ஆண் தன்மையை கெட்டிப்படுத்துவதோடு புருஷ தன்மையில்லாமை, அசக்தி பலவீனம் மூத வியாதிகளை போக்கி சுறு சுறுப்பையும் பலத்தையும் கொடுக்கும் இதுவுமன்றி நித்திரையில் நீர்வடிதலையும் நிற்கச் செய்யும். இந்த லேகியம் பிள்ளை பெற சக்தியில்லாத பெண் பிள்ளைகளுக்கு தேவாமிர்தம் போன்றது. இதை ஒருமுறைவாங்கி சாப்பிட்டு பரீட்சை பார்த்தாலன்றி இதன் உண்மை விளங்காது. இதற்கு அத்தாட்சியாக அநேக டாக்டர்மார்களும் ஆயுள் வேதவைத்திய சிகாமணிகளும், சித்த வைத்திய பதிகளும், யூனனி வைத்திய பண்டிதர்களும் இன்னம் அநேக பிரமுகர்களும் இந்த லேகியத்திற்காக ஏராளமான நற்சாட்சி பத்திரம் அளித்திருப்பதிலிருந்தே இதன் உண்மை விளங்கும் அவற்றில் சிலதை மாதிரிக்காக பெயர்களை மாத்திரம் அடியில் குறிப்பிடுகிறோம்.

உறுதிமொழிப் பத்திரம்.

டாக்டர் M. சோட்டாசிங் L. M. S.
டாக்டர் S. துரைசாமி பிள்ளை பிரிட்டிஷ் இந்தியா டிஸ்பன்சரி
டாக்டர் M. பார்த்தசாரதி C. D. Ac.
Mr. S. ஜோஸ் டிவிஷனல் எஞ்சினீர் G. P. O.
கடப்பை, பரமஹம்ஸ சச்சிதானந்த யோகீஸ்பாரின் பிரதம சிஷ்யரும், வேதாந்த வைத்திய ஜோதிஷ பூஷணம் சாது சோமசுந்திர சுவாமிகள்.

திருப்பாதிரிப்புலியூர் ஆயுர்வேத பண்டிதர் ஸ்ரீமான் இ. வீராசாமி நாயுடு அவர்கள்
ஆயுள்வேத வைத்திய பண்டிதர், வை. கந்தசாமி பிள்ளை ஆயுள்வேத சித்தவைத்திய பூஷணம்.
ரு. லாஸான் பண்டிதன் ஸ்ரீமத் T. R. மகாதேவ பண்டிதர் அவர்களின் மருமகரும் மாணாக்கருமாகிய மகா-ா-ா-ஸ்ரீ M. நடராஜ பிள்ளை.

முழு விபரமும் கேட்லாக்கில் பார்க்கவும், 20-நாள் சாப்பிடக்கூடிய லேகியத்தின் விலை $ 2 வெள்ளிதான் ஆனால் ஒவ்வொருவரும் 40 நாளைக்கு குறையாமல் சாப்பிடவேண்டும், பத்தியமில்லை, போஸ்டேஜ் வேறு. உடனே எழுதுங்கள். 40 நாள் சாப்பிடக் கூடிய லேகியம் $ 3-75

பிரான்ஜ் ஆபிஸ்:— 17, சைனா ஸ்திரீட், பினாங்கு.

ஹெட் ஆபீஸ்:— காந்தரசம் கம்பெனி, 251 சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்.

குறிப்பு:-இந்தியா இலங்கை பர்மாவிலுள்ளவர்கள் ஆர்டருடன் போஸ்டேஜ் உள்பட முன்பணம் அனுப்பினாலல்லது மருந்து அனுப்பப்படமாட்டாது.



## தீபாவளி! பண்டிகை தீபாவளி!!

### வெள்ளி நகைகள்.

எங்கள் சொந்த பார்வையில் தயார் செய்யப்படும் சொக்க வெள்ளி தண்டை, கொலுசு, செயின், அரைஞாக்கொடி, கெங்காதரக் கொடி, பீலி வகையறாக்களும் இமிடேசன் சிகப்பு கம்மல், கடுக்கன், தோடு வகைறாக்களும் அசல்பட்டு ஜரிகை பேட்டு வேலமானம் பட்டு லேஞ்சுகளும், வெண்பட்டுவகையறாக்களும் இமிடேசன் பட்டு சேலை, ரவிக்கை, டாவினி 1, 2, 3 ரூ. லேஞ்சுகளும், இன்னும் பலவித தினுசுகளும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு விலைகளை குறைத்து இருக்கிறோம் வேண்டியதற்கு ஆர்டர் எழுதினால் உடனுக்குடன் வி. பி. யில் அனுப்பி வைக்கிறோம். விபரம் வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்

விலாசம்,
தொ. வெ. சென்னி செட்டி & சன்ஸ்
சறுப் & ஜவுளி வியாபாரம
குகை, சேலம். (S. India)

தந்தி விலாசம் "சராப்" சேலம்



## கதர்வாங்குவோர்களுக்கு வேண்டுகோள்.

வரும் தீபாவளியன்று கதரணிவது கடமையல்லவா. அன்றையதினம் முக்கியமாக கதர் பனியனாவது அணியவேண்டும். நம்மிடம் உறுதியான நம்பிக்கையுள்ள உழைக்கக்கூடியதுமான சுத்த கதர் பனியன்கள் கிடைக்கும்

விலை டஜன் 1 க்கு

28 இஞ்ச 7-14-0 30 இஞ்ச 8-4-0
32 இஞ்ச 8-10-0 34 இஞ்ச 9-0-0.

உடனே வேண்டிய பனியன்களுக்கு ஆர்டர் செய்யுங்கள். இன்னும் மற்ற எல்லா விதமான கதர் ஜவுளி தினுசுகளும் கிடைக்கும். விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M. V. கருப்பண்ணசெட்டியார்,
திருப்பூர்,
(தென் இந்தியா.


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.